மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 4 | 15 - 4 - 56 | இதழ் 24

இளவயதிலேயே

அறிவியல் வல்லுநராகத்

திகழ்ந்த

அம்பிரி டேவி

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

கறுப்புச்சட்டைப் படை

"கறுப்புச் சட்டைப் படை' என்ற பெயரில் தொண்டர் படை ஒன்று நிறுவவேண்டும் என்ற தீர்மானம், முதன்முதல், 1945-ஆம் ஆண்டில், திருச்சியில் நடைபெற்ற திராவிடக்கழக மாநில மாநாட்டில்தான் நிறைவேற்றப்பட்டது.

அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவ அறிஞர் அண்ணா அவர்களேயாவார்கள். கழகத் தொண்டர் படை நிறுவுவதுபற்றிப் பெ யார் இராமசாமியும் அறிஞர் அண்ணாவும் கலந்து உரையாடிக் கொண்டிருந்தபோது, தொண் டர் படைக்கு எந்த நிறச் சட்டையை ஏற்படுத்தலாம் என்ற பேச்சு எழுந்தது. அப்பொழுது மஞ்சள் காங்கிரசின் நிறமாகவும், சிவப்பு கம்யூனிசுட்டின் நிறமாகவும், பச்சை முசிலீம் லீக்கின் நிறமாகவும், ஊதா ராடிக்கல் டெமாக்ரடிக் கட்சியின் நிறமாகவும் பொதுவாக நாட்டினரால் கரு தப்பட்டு வந்தன. கழகத்தின் நிறமாக அவை தவிர்த்த வேறோர் நிறத்தைத் தேடவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. கழகத்தொண்டர் படைக்குக் கறுப்புச் சட்டையை அடை யாளமாகக் கொள்ளலாம் என்றும், இத்தாலிய நாட்டு விடுதலைவீரன் காரிபால்டியின் விடுதலைப் படை கறுப்புச் சட்டைப்படை என்றுதான் அழைக்கப்பட்டு வந்தது என்றும், எனவே கழ கத்தின் தொண்டர் படைக்குக் கறுப்புச்சட்டைப் படை என்று பெயரிடலாம் என்றும் அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள். அண்ணாவின் கருத்து பெரியாருக்கு ஏற்புடையதாகவே பட்டது. பிறகு அது மாநாட்டில் தீர்மானவடிவு பெற்றது.

தீர்மானம் நடைமுறைக்கு வரும்போது, வேறு உருவம்பெறத் தொடங்கிற்று. தொண்டர் படைக்கு என்று ஏற்படுத்தப்பட்ட கருப்புச்சட்டை அடையாளம், கழகத் தோழர்கள் அனைவரும் போட்டுக் கொள்ளவேண்டிய அடையாளமாகப் பெரியாரால் மாற்றப் பட்டது. தீர்மானம் ஒன்று, நடைமுறை வேறாக அமைந்தது. இந்தப் போக்கு அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிடிக்கவில்லை. பொறுக்கி எடுக்கப்படும் தொண்டர் படையினர் மட்டுந்தாம் முறையான கறுப்புச் சட்டை அணியவேண்டுமேயல்லாமல் கழகத் தோழர்கள் அனைவரும் கண்ட கண்டபடி கறுப்புச் சட்டையை அணியக்கூடாது என்பது அறிஞர் அண்ணாவின் கருத்தாகும். போலீசுக்காரன் உடையைப் பிறர் எப்படி அணியக்கூடாதோ, படைவீரனின் உடையைப் பிறர் எப்படிப் போட்டுக்கொள்ளக்கூடாதோ, நீதிபதியின் உடைகளைப் பிறர் எப்படி மாட்டிக்கொள்ளக்கூடாதோ அப்படியே கருப்புச் சட்டையைத் தொண்டர் படையினர் தவிர பிறர் அணியக்கூடாது என்ற முறை வேண்டும் என்று அண்ணா அவர்கள் பெரியாரிடத்தில் பலதடவை வாதாடினார்கள். கடமையுணர்ச்சி யுள்ள தகுதிவாய்ந்த கழகத்தொண்டர்மட்டுந்தான் கறுப்புச்சட்டை அணியவேண்டும் என்றும் அந்த வகையில் அதன் மதிப்பு போற்றிக் காப்பாற்றப்படவேண்டும் என்று அண்ணா அவர்கள் கருதினார்கள். இல்லையாயின் கருப்புச் சட்டையின் மதிப்பு பலவகை களிலும் குறைக்கப்பட்டுப் போய்விடும் என்று அவர்கள் கருதினார்கள். குறிப்பிட்ட பணியைக், குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட காலத்தில் செய்யும்போதுதான் கருப்புச் சட்டை அணியவேண்டுமே தவிர, எங்கும், எப்பொழுதும், எந்தப்பணியைச் செய்யும்போதும் அணியக்கூடாது என்ற வரைமுறை இருக்கவேண்டும் என்றும் அண்ணா அவர்கள் எடுத்து ரைத்தார்கள். ஆனால் பெரியார் அவர்கள் அண்ணாவின் கருத்துக்களைச் செவிமடுக்கத் தயாராக இல்லை. கறுப்புச் சட்டையைப் போட்டுக்கொள்ள அண்ணா அவர்கள் வெட்கப்படுகிறார் என்று தவறாகக் கருதிக்கொண்டு, பெரியார் அவர்கள், கழகத் தோழர்கள் எல்லோரும், எப்பொழுதும், எங்கும் கறுப்புச் சட்டையைக் கூடுமானவரையில் அணியவேண்டும் என்று அண்ணாவின் கருத்துக்கு எதிரான முறையில் வற்புறுத்திவரத் தொடங்கினார்கள். அந்த முறை அண்ணாவுக்கு அறவே பிடிக்கவில்லை, அண்ணா அவர்கள் தலைவரின் கட்டுப்பாட்டின் காரணமாக மேடை ஏறிப் பேசும்போதுமட்டும் வேண்டாவெறுப்போடு கருப்புச் சட்டையை அணிந்து வந்தார்கள். அதனால்தான் வரையறையற்ற முறையில் கறுப்புச் சட்டையணியும் பழக்கத்தை அண்ணா அவர்கள் மேற்கொள்ளவில்லை; மேற்கொள்ள விரும்பவில்லை.

கருப்புச்சட்டைப் படைக்குத் தடைவிதிக்கப்பட்டபோது இயக்கத்தில் மிக்க தொடர்பு கொள்ளாமல் அதுவரையில் ஒதுங்கி நின்ற அறிஞர் அண்ணா அவர்கள், கறுப்புச் சட்டை அணிந்துகொண்டு ஓடோடியும் கறுப்புச் சட்டை மாநாட்டில் கலந்து கொண்டார்கள். இது அண்ணாவின் தூயபண்பையும், கடமையுணர்ச்சியையும் காட்டுவதாகும்.

1096

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15 - 4 - 56 ஞாயிற்றுக்கிழமை

அவமானச் சின்னங்கள் !

மாநிலப் புது அமைப்பு மசோதா சென்னைச் சட்ட மன்றத்தில் நிறைவேறிவிட்டது! இல்லை, இல்லை நிறைவேற்றப்பட்டுவிட்டது!

தேவிகுளம் — பீர்மேடு — நெய்யாற்றங்கரை — கொச்சிச்சித்தூர்—பாலக்காடு ஆகிய தாலுக்காக்களின் தமிழ்ப்பகுதிகளும், செங்கோட்டையின் தெற்குப்பகுதியும், வடக்கே சித்தூர் — புத்தூர் — திருத்தணித் தாலுக்காக்களிலுள்ள தமிழ்ப்பகுதிகளும் புதிய தமிழகத்தோடு சேர்க்கப்படவேண்டும்.

புதிய தமிழ் மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிடப்படவேண்டும்.

என்று சனநாயக முறையால் மக்கள் மன்றம் கொண்டுவந்த திருத்தங்களைச், சென்னை அமைச்சரவை தன் சர்வாதிகாரத் தன்மையால் புறக்கணித்துவிட்டது. எனினும் மக்கள் மன்றம் அந்தத் திருத்தங்களைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டுதானிருக்கிறது; இனியும் நிறைவேற்றிக்கொண்டுதானிருக்கும். மக்கள் மன்றம் எனும் எரிமலை குமுறிக்கொண்டுதானிருக்கிறது; என்றேனும் ஒருநாள் அது வெடித்துத்தான் தீரும். அதன் வெந்தழலிலே, ஒரு காலமில்லாவிட்டாலும் ஒரு காலத்தில் அமைச்சரவையின் சர்வாதிகாரப் பிற்போக்குத் தன்மைகள் பொசுக்கப்பட்டே தீரும் என்பது உறுதி.

இன்று சென்னை அமைச்சரவையில் வீற்றிருக்கும் மானங்கெட்ட அமைச்சர்களைப் போல், இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எங்கணும் யாரேனும் இருப்பதாகச் சொல்ல முடியாது. மற்றைய மாநிலங்களின் அமைச்சரவைகள் இந்தியப் பேரரசிடம் உரிமைகளுக்குப் போராடித் தம் கோரிக்கைகளை நிறைவேற்றி வீரவாழ்வு நடத்துகின்றன. ஆனால் சென்னை அமைச்சரவையோ இந்தியப் பேரரசின் எடுபிடியாக இருந்து, தன் உரிமைகளை விட்டுக் கொடுத்துக் குற்றவேல்கள் செய்து, மானங்கெட்ட கோழை வாழ்வு நடத்தி வருகிறது.

தமிழ்ப் பெருங்குடிமக்களின் **சார்பாகக்** கூட்டணியினர் வெளியிட்ட கோரிக்கைகள், சட்டமன்ற காங்கிரசுத் தமிழ் **உறுப்பினர்**களுக்கு உடன்பாடானவையே ஒழிய, **மாறு**பாடானவை என்று எந்த ஒரு தமிழ் **உறுப்**பினரும் தம்நெஞ்சில் கையைவைத்து **மன**மாரக் கூறமாட்டார் என்பது உறுதி. **அவர்**களது ஆவல் கோரிக்கைகள் **பக்கமிருந்**தாலும், காங்கிரசு மேலிடமும், **அதற்கு** ஆட்டம்போடும் அமைச்சரவையும் **விதித்த** சர்வாதிகாரக் கட்டுப்பாடுகளைக் கோரிக்கைகளுக்கு எதிர்புறத்தில் கொண்டுபோய் நிறுத்திவிட்டது. "மசோதாவுக்கு **எதிராக** ஒரு உறுப்பினரும் வாக்கு அளிக்கக்கூடா**து;** தலைவர் அனுமதியின்றி எந்த உறுப்பின**ரும்** திருத்தம் கொணரக்கூடாது" **என்று சர்**வாதிகாரக் கட்டளைப் பிறப்பித்துவிட்டு, மசோதா சட்டத்தில் நிறைவேறிவிட்டது என்று கூறுவதில் என்ன சனநாயக ஒழுங்கு இருக்கிறது? பெரும்பான்மையினராகச் சட்ட மன்றத்தில் வீற்றிருக்கும் **காங்கிரசு உறுப்பினர்கள்** அனைவரையும் **கைகாட்டி மரங்க**ளாக ஆக்கிவிட்டுத் **தோழர் சுப்பிரமணியம்** பிடியை இழுத்தால் **எல்லாக்கைகளும் உயர்**கிற மாதிரியில் **செய்தபிறகு, அவர் சட்ட** மன்றத்தில் **நின்று வீராப்புப் பேசுகிறார்** என்றால், அதில் என்ன **பொருள் இருக்க** முடியும்? காங்கிரசு மேலிடத்தின் அநீதியான போக்குக்கு எடுபிடியாகும் கோழையாகிறார் சுப்பிரமணியம் என்றுதான் பொருள்கொள்ள வேண்டும்.

ஆந்திர முதலமைச்சர் தோழர் கோபால ரெட்டியார் சட்ட மன்றக்காங்கிரசு **உறுப்**பினர்க்கு, வாக்கு அளிப்பதில் முழுச்சுதந்திரமும் அளித்து, பெல்லாரியையும், **பர்லக்**கிமிடியையும் மீட்கிபெறும் திருத்தங்களுக்கு ஆதரவு தந்து, 'ஆந்திரப்பிரதேஷ்' **என்ற** புதுப்பெயரிட இசைவும் தந்துள்ளார். **அவ**ரல்லவோ வீரர்! இங்கேயும் மந்திரிகள் இருக்கிறார்களே, ஈற்று'ர'கரம் கெட்ட மந்திரிகளாக!

'தமிழ்நாடு' என்று ஏன் பெயரிடவேண்டும் என்று கேட்கின்ற அளவுக்குத் தன்மானமும் தமிழுணர்ச்சியும் அற்ற அமைச்சர்கள் தமிழகத்தின் ஆட்சிமனையில் அமர்ந்திருக்கின்றனர்! இது தமிழகத்திற்கே பெருத்த அவமானமாகும்! அமைச்சர்களின் வினவிற்கு, "செந்தமிழ் நாடு எனும் போதினிலே, **இன்**பத்தேன்வந்து பாயுது காதினிலே" **என்று** பாரதியார் நீண்ட நாட்களுக்கு முன்பே **விடை** யிறுத்துவிட்டார்!

இன்றைய சென்னைத் தமிழ் அமைச்சர்கள் தமிழகத்தின் **அவமானச் சின்னங்கள் என்று** கூறினால் அது மிகையாகாது!

கருத்துக் கதிர்

குறைபாடுகள்கொண்ட குழு

"மாநிலப் புதுஅமைப்புக்குழுவில் நிர்வாகத்திறனும், அனுபவமும் கொண்டவர்களும், மக்களின் உணர்ச்சிகளை அறிந்தவர்களும் இடம் பெற்றிருக்க வேண்டும்; ஆனால் குழுவில் இருந்த மூவர்க்கும் நிர்வாக அனுபவமும் கிடையாது, அவர்கள் மக்களின் தலைவர்களாயுமில்லை. அவர்கள் ஏதேனும் தவறிழைத்திருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம், அவர்களிடமுள்ள இந்தக் குறைபாடுகள் தாம்.

"அவர்கள் மூவரும் இந்த மாநிலப் புது அமைப்பு விவகாரத்தைத் திருப்திகரமாகத் தீர்த்து வைப்பதற்குரிய வகையான நபர்கள் அல்லர்."

"துவக்கத்திலேயே நாம் இழைத்ததவறின் விளைவாக, இப்பொழுது, புயலின் விளைவுகள் எனப்படுபவற்றை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்."—என்று மைசூர் முதலமைச்சர் தோழர் அனுமந்தையா அவர்கள், மைசூர் சட்ட மன்றத்தில், மாநிலப் புதுஅமைப்பு மசோதாபற்றிய தீர்மானத்தைக்கொண்டு வந்து பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

* * *

அர்த்தால் அர்த்தமற்றதா?

"இந்தியாவில் பல இடங்களிலும் அர்த்தால்கள் நடைபெற்றன. ஆனால் சென்னையில் நடைபெற்ற அர்த்தால் அமைதியாகவே நடைபெற்றது. அர்த்தால் நடத்துவது என்பது, ஒருவன் தனது எதிர்ப்பை நல்ல முறையில் எடுத்துக்காட்ட மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையே. கோவாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எதிர்த்து நடைபெற்ற அர்த்தாலை மட்டும் ஆதரித்துவிட்டு, மற்ற எந்தக் காரியங்களுக்காகவும் அர்த்தால் கூடாது என்று காங்கிரசுக் கட்சி கூறுவது நியாயமாகாது."—என்று தோழர் பி. டி. இராசன் அவர்கள் அண்மையில் சென்னை சட்ட மன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

அர்த்தால் அர்த்தமற்றது என்று இப்பொழுது பிதற்றித் திரியும் சென்னை அமைச்சர்களுக்கு சவுக்கடி கொடுத்ததுபோல் ஆகும், தோழர் பி. டி. இராசனின் கூற்று. அர்த்தால் அர்த்தமற்றது என்று உளறிடும் அமைச்சர்களுக்குக், கோவாவுக்கு நடத்திய அர்த்தால் மட்டும் இனிப்பானேன்? மாநிலப் புது அமைப்புக்காக நடத்திய அர்த்தால் மட்டும் கசப்பானேன்? முன்னுக்குப் பின் முரண்படும் பதவிப் பித்தர்கள் அவர்கள் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல இருக்கிறது.

* * *

கழகம் பெரிய கட்சி அல்லவாம்

"நாட்டைத் துண்டாட வேண்டும் என்று கூறும் கட்சி, பெரிய கட்சி அல்ல" என்று ஒரு கம்யூனிசுட்டுக் கட்சி உறுப்பினர் சென்னைச் சட்ட மன்றத்தில் கேலியாகக் குறிப்பிட்டாராம். இதே கருத்தை வேறோர் கம்யூனிசுட்டுக் கட்சி உறுப்பினர் சென்னைக் கூட்டமொன்றிலும் குறிப்பிட்டாராம்.

ஒரு கருத்து சரியானதா? அல்லது தவறானதா? என்பதை கண்டறிந்துகொள்ள, அந்தக் கருத்தை வெளியிட்ட கட்சியின் அளவை அளவுகோலாகக் கொள்ளும் பழக்கம் கம்யூனிசுட்டுத் தோழர்களிடையே ஏற்பட்டிருப்பது வியப்புக்குரியதாக இருக்கிறது. இந்தக்காலம் கம்யூனிசுட்டுக்களிடத்திலே பலப்பல வியப்புக்குரிய—ஏளனச் சிரிப்புக்குரிய போக்குகளைக் காண்கிறோம். அவற்றிலே இதுவும் ஒன்றுபோலும்.

கழகத்தைச் சிறிய கட்சி என்று கூறி, கேலி பேசும் கம்யூனிசுட்டுக்களைப் பார்க்கும்போது, கொக்கைப்பார்த்து "நீ கோணல்!" என்று கூறிய ஒட்டகத்தின் கதைதான் நினைவிற்கு வருகிறது.

* * *

வெட்டிப்பேச்சு வீரர்

"திராவிடநாடு கோரிக்கையையோ அதன் பொருளையோ நான் அறிந்துகொள்ள விரும்பவில்லை"—என்று சென்னை நிதி அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் அண்மையில் பேசியுள்ளார்.

ஒரு கருத்தைப்புரிந்து கொள்ளாமலும், புரிந்துகொள்ள விரும்பாமலும், முயற்சிக்காமலும், அந்தக்கருத்தை அடியோடு வெறுக்கவும், எதிர்க்கவும் ஒருவர் முயலுகிறார் என்றால், அவரை எத்தகைய பித்தர் பட்டியலில் சேர்ப்பீர்கள்! அத்தகைய பட்டியலில் சேர்க்கப்படவேண்டிய ஒருவராகத்தான் தோழர் சி. சுப்பிரமணியம் காட்சியளிக்கிறார். அவர் வெறும் வெட்டிப்பேச்சு வீரரே ஒழிய, காரண காரிய விளக்கத்தோடுகூடிய கருத்துரையை அவரிடம் எதிர்பார்க்க முடியாது என்பதை இந்தக் கூற்றின்மூலம் தெளிவுபடுத்திக்காட்டிவிட்டார்.

குட்டு வெளியாகிறது

“தத்துவம், பொருளாதாரம், விவசாயம் ஆகிய துறைகளில் ரஷ்யா முன்னேறுமலிருப்பதற்கு ஸ்டாலினின் தலைமையே காரணம்... ரஷ்யாவில் சர்வாதிகாரம் தோன்றியதற்கும், அதன் விளைவுகளுக்கும் காரணமானவர் ஸ்டாலினே...சர்வாதிகாரப் பித்து அவரிடத்தில் துளிர்விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக அவரை ஆட்கொண்டுவிட்டது. தன்னடக்கம் அவரிடமிருந்து மறைந்தது. புகழ்ச்சிக்குப் பாத்திரமாகி அதில் மூழ்கினர். நாளடைவில் சர்வாதிகாரம் அவரிடத்தில் முழு ரூபத்தை பயங்கர ரூபத்தைப் பெற்றது—” என்று ரஷ்யா கம்யூனிசுட்டுக்கட்சி இதழான ‘பிராவ்தா’வில் வெளிவந்த கட்டுரை ஒன்று கூறுகிறதாம். மெல்ல மெல்ல குட்டு வெளிப்படுகிறது!

* * *

இந்தியை திணிக்கக் கூடாது

“இந்தியை மைசூரிலும் சரி, மற்ற தென்னிந்திய அரசுகளிலும் சரி கட்டாயமாகத் திணிக்கக் கூடாது.”

“ஆங்கிலத்துக்கு எதிராகக் கூச்சலிடுவதும் ஒரு வெறிதான்.”

“விஞ்ஞானம், சனநாயகம் இவற்றை ஆங்கிலம் மூலமே நாம் கற்றுக்கொண்டோம்” —என்று இந்தித் திணிப்பை எதிர்த்தும், ஆங்கிலத்தை ஆதரித்தும் மைசூர் முதலமைச்சர் தோழர் அனுமந்தையா மைசூர் சட்டமன்றத்தில் பேசியுள்ளார்.

* * *

அவர்கள் கூறினர்கள் இவர்களும் கூறுகிருர்கள்!

ஸ்டாலின் வாழ்க்கையின் பிற்பகுதியில் வளர்ந்த தனி நபரைத் துதிபாடும் கொள்கையால் பல தவறுகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் சோவியத் கம்யூனிசுட்டுக் கட்சியின் 20-வது காங்கிரசின் அறிக்கையை ஆதரித்து இந்தியக் கம்யூனிசுட்டுக் கட்சியின் மத்திய கமிட்டி தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

அப்படி ரஷ்யா கம்யூனிசுட்டுக்கள் கூறினர்கள்; எனவே இந்தியக் கம்யூனிசுட்டுக்களும் கூறுகிருர்கள். ‘மாஸ்கோ’ கம்யூனிசுட்டுக்களின் ‘மெக்கா’ என்று சிலர் கூறியதில் பொருளிருக்கிறது என்பது, இதனுல் தெளிவு பெறும்.

* * *

எலி வேட்டைக்குப் பயந்தவர் புலி வேட்டைக்குப் புறப்படுகிருர்!

“தென் பகுதியைப் பொறுத்த வரையில் தொழில் வளர்ச்சி மிகக் குறைவு. அதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. தொழில் வளர்ச்சியே இல்லை என்று சொல்லவில்லை. கைத்தொழில்கள் கிடையா. இதில் கட்டாயம் கவனம் செலுத்துவது அவசியமாகும்.”

“சென்னை ராஜ்யத்திற்குத் திட்டச் செலவுக்காக ரூ. 172 கோடி ஒதுக்கியிருக்கிறது. திட்டக் கமிஷனும், இந்திய சர்க்காரும். இந்த ரூ. 172 கோடி போதாது. ஆகையால் போதாது என்று சபையும், அங்கத்தினர்களும் திட்டக் கமிஷனிடம் வற்புறுத்த வேண்டும். ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்ல வேண்டும். இதற்குச் சபையின் ஆதரவு இருக்கும் என்று நம்புகிறேன்”—என்று நிதி அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் சட்டமன்றத்தில் கூறியுள்ளார்.

தமிழ்ப்பெருங்குடி மக்களின் ஒரு மனதான உணர்ச்சியும், ஒத்துழைப்பும், ஆதரவும் தேவிகுளம்—பீர்மேடுபற்றிய பிரச்சினையில் இருந்தும், அந்தப் பகுதிகளை வற்புறுத்தி வாங்கித் தர அஞ்சிய கோழையாகிய இந்த அமைச்சர், கைத் தொழில்களுக்காக வாதாடப் போகிருராம். எலிவேட்டை ஆடப் பயந்தவர் இப்பொழுது புலிவேட்டைக்குப் புறப்படுகிருராம்!

* * *

அலட்சியம் அச்சமாக மாறுகிறது

“ஆரியர் திராவிடர் பிரிவினை அடிக்கடி தலைதூக்குகிறது. இத்தகைய ‘பிரிவினைச் சக்திகளை’ வெறுமனே அலட்சியம் செய்வது சரியல்ல. நல்லபடி நிலைமையை உணர்ந்து கொள்ளாவிடில் அது விபரீதத்திற்கு வித்தூன்றலாம்.”

“முஸ்லிம் லீகின் செல்வாக்கு ஆரம்பக் காலத்தில் மிகவும் அற்ப சொற்பமே. இருந்தாலும் நாட்டுப் பிரிவினை எனும் பெரியதொரு ‘சோகக் கதைக்கு’ அதுவே காரணமாயிருந்தது. இன்று ஆரியர்கள் என்றும், திராவிடர்கள் என்றும் மக்களைப் ‘பிளவுபடுத்தும்’ சக்திகளை அர்த்தமற்றவை என்று நாம் அசட்டை செய்வோமானுல், அவையும் இறுதியில் ‘வீணுன விபரீதத்தை’ விளைவிக்கலாம். இன்னெரு பிரிவினைக்கு வழி செய்யலாம்”

—என்று சென்னை கவர்னர் பிரகாசா சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசியுள்ளார்.

திராவிடநாட்டுப் பிரிவினை முழக்கத்தை இதுவரையில் அலட்சியமாகக் கருதிவந்த மாற்றுர், இப்பொழுது அது குறித்து அச்சங்கொள்ளத் தலைப்பட்டிருக்கிருர்கள் என்பதற்குத் தோழர் பிரகாசா சிறந்த எடுத்துக்காட்டாவார். நாம் களத்தில் முன்னேறுகிறோம், மாற்றுர் பின்வாங்குகிருர்கள் என்பதன் அறிகுறியாகும் இது.

செய்திச்சுருள்

திராவிடத்தில் மைக்கா

திராவிடத்தின் பல பகுதிகளிலும் குறிப்பாக ஆந்திரப்பகுதியிலும் கிடைக்கும் மைக்கா உலகிலேயே முதல்தரமானது என்று பெயர் பெற்றிருக்கிறது. பிறநாடுகளைத் தனித்தனியாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது, திராவிடந்தான் மிகவான மைக்காவை ஆண்டுதோறும் தோண்டி எடுக்கிறது.

மைக்காவைத் தோண்டி எடுக்க அனுமதி அளித்தல், பணமுதலீடு தருதல், மார்க்கெட் வசதி ஏற்படுத்தித் தருதல் போன்றவைகளில் இந்தியப் பேரரசின் ஒத்துழைப்பு சரியானபடி கிடைக்காததால், மைக்கா வாணிகம் போதுமான அளவுக்கு வளர்ச்சி யடையாமலே இருந்து வருகிறது.

* * *

தொழிற்கல்லூரிகள் எல்லாமும் அங்கே

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும், 14 பொறி இயற் கல்லூரிகள் துவக்குவது என்று முடிவு கட்டப்பட்டிருக்கிறது. இவற்றில் ஒன்று கூட தென்னாட்டில் நிறுவப்படமாட்டாதாம்; எல்லாமும் வடக்கேதான் நிறுவப்படுமாம்.

இந்த அநீதியான நிலை போதாது என்று, எல்லாவற்றையும் கோட்டைவிடுவதிலே வல்லமை பொருந்திய சென்னை அமைச்சரவை, கிண்டி பொறியியற் கல்லூரியை வேறு இந்தியப் பேரரசிடம் ஒப்படைத்துவிட எண்ணியிருக்கிறதாம். இந்தியத் துணைக்கண்டத்திலேயே மிகப் புகழ் பெற்ற கிண்டி பொறியியற் கல்லூரி, இனி முழுக்க முழுக்க வடவர்க்கே பயன்படும் என்பதில் ஐயமில்லை.

* * *

கையாலாகாத 'கடவுளு'க்கு மீண்டும் அழைப்பு

வேலூர் கோட்டைக்குள் இருக்கும் சலகண்டேசுவரர் ஆலயத்தை மீண்டும் புதுப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

300 ஆண்டுகளுக்கு முன்பு பக்தர்களிடமிருந்து பூசைகளைப் பெற்றுக்கொண்டிருந்த 'சலகண்டேசுவரர்,' முசிலிம் படையெடுப்புத் தாளாமல், பக்தர்களை மாற்றார் ஆட்சியின் கீழ்த் தவிக்க விட்டுப் பதினேழாம் நூற்றாண்டில், குப்புறக் கவிழ்ந்து மண்ணைக் கவ்வினார். அந்தக் கையாலாகாத 'கடவுளை' மீண்டும் தூக்கி உட்காரவைக்க மூட நம்பிக்கையாளர் இப்பொழுது முயலுகிறார்களாம்.

வேலூர் கோட்டைக் கோயிலைப் பொருட்காட்சிச் சாலையாகவும், அதிலுள்ள 'சலகண்டேசுவரரை'ப் பொருட்காட்சிப் பொருளாகவும் ஆக்கிடும் காலம், விரைவில் வரப் போகிறது என்பதை, ஏனோ 'பக்தகோடிகள்' இன்னமும் உணரவில்லை.

* * *

புற்றுநோய்க் கருவி

மனித உடலில் புற்றுநோய் எங்கு ஏற்பட்டிருந்தாலும் அதைக் கண்டுபிடிக்கக் கூடிய கருவி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதன் பெயர் சாஸ்விஞ்ஞெ மீட்டர். செகோஸ்லேவேகிய உற்பத்திசாலை ஒன்றில் இந்தக் கருவியைத் தயாரிக்கிறார்கள்.

* * *

கருத்தடைக் கருவி

இங்குக் கருத்தடைக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அமெரிக்கா கம்பெனி முன்வந்திருக்கிறது. மிகக் குறைந்த விலையில் கருவிகளை உற்பத்தி செய்வதாக அக்கம்பெனி கூறுகிறது. ஒருவர் ஒரு ஆண்டு முழுவதற்கும் பயன்படுத்த, கருவிகள் வாங்க, ரூ. —1—8—0 தான் செலவாகும் என்று சொல்லப்படுகிறது.

* * *

மாரடைப்புச் சாவு

மருத்துவவியல், நோய்களை ஒழிப்பதில் முன்னேற்றம் கண்டுவருகிறது. புற்றுநோய், சயரோகம், இளம்பிள்ளை வாதம் ஆகிய கடுமையான நோய்களை வென்றுவிட்டோமானால், மாரடைப்பே நம் உயிரை மிகவாகக் கொள்ளை கொள்ளக்கூடியதாகும் என்று அமெரிக்க டாக்டர் பால் டட்லி ஒயிட் குறிப்பிடுகிறார். அமெரிக்காவில் பெரும்பாலோர் இருதய நோய் மிகுவதற்கு அளவுக்கு மீறிய உணவும், உடற்பயிற்சியின்மையும் காரணமாகும் எனவும் அவர் கூறுகிறார்.

* * *

திராவிடத்தில் தீப்பெட்டி உற்பத்தி

திராவிடத்தில் மட்டும் சுமார் 70 தீப்பெட்டித்தொழிற்சாலைகள் ஆண்டுதோறும் 1,62,50,000 குரோஸ் தீப்பெட்டிகளை உற்பத்தி செய்கின்றன.

வினாவும் விளக்கமும்

வினா : சிலர் ஏன் கருப்புச்சட்டை அணியவேண்டும்? கறுப்பு ஏதோ ஒன்றின் அறிகுறி அல்லது சின்னம் என்பதற்காகத்தானே? அப்படித்தானே திருநீறும் திருமண்ணும்? அப்படியிருக்க தாங்கள் சமயச் சின்னத்தை மறுப்பானேன்?

[இது அருள்நெறித்திருக்கூட்டத்தாரின் பதின்மூன்ருவது வினா.]

விளக்கம் : கறுப்பு, சிவப்பு, மஞ்சள், வெள்ளை போன்ற பல்வேறு நிறங்களுக்கு நாம் பல்வேறு தன்மைகளைக் கற்பிக்கிருேம். அதாவது 'கறுப்பு'—இழிவு, தாழ்வு, துக்கம் போன்ற தன்மைகளை உணர்த்துகிறது என்றும், 'சிவப்பு'—புரட்சி, அபாயம் போன்ற தன்மைகளை நினைவுபடுத்துகிறது என்றும், 'மஞ்சள்'—வறிய நிலைமை (பாப்பர்), மங்களகரம் போன்ற தன்மைகளை அறிவிக்கிறது என்றும், 'வெள்ளை'— தூய்மை, அமைதி போன்ற பண்புகளைத் தெரிவிக்கிறது என்றும் கற்பித்துக்கொண்டிருக்கிருேம்.

அந்தந்த நிறங்களுக்கு அந்தந்தத் தன்மைகளை நாமாகத்தான் ஏற்றியிருக்கிருேமே ஒழிய அந்த நிறங்களாகப் பார்த்து அந்தத் தன்மைகளை ஏற்றுக்கொண்டுவிடவில்லை. ஒரு நிறத்திற்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் தன்மையை மற்றெரு நிறத்திற்கு ஏற்றிவைத்துக் கூறினலும் பொருந்தும்; அதனல் அந்த நிறம் ஒன்றும் கவலை கொண்டுவிடாது. தொன்றுதொட்டு உலக மக்கள் ஒரே அடிப்படையில் கையாண்டு வந்த பழக்கம் என்ற மரபுபற்றி, அந்தந்தந்த நிறங்களுக்கு, அந்தந்த தன்மைகளை, அந்தந்த காலம்—இடம்--நோக்கத்தைப் பொறுத்துக் கையாளுகிருேம்.

கறுப்பு, இழிவு—தாழ்வு—துக்கம் ஆகியவற்றின் அறிகுறி அல்லது சின்னம் என்றுதான் நாம் கருதுகிருேம். அதில் ஐயமில்லை. கறுப்புக்கு நாமாக அந்தத் தன்மைகளை கற்பித்துக்கொண்டுள்ளோமே ஒழிய அந்த நிறத்திற்கு இயல்பாகவே அந்தத் தன்மைகள் கிடையா. மேலும் கறுப்புநிறம், தனியாகத் தனக்கென்று தனிப் பண்புகளையோ, அறிவையோ ஆற்றலையோ பெற்றிருக்கவில்லை என்பதை நாம் அழுத்தந்திருத்தகாகக் கூறுகிருேம்.

நாம் திருநீறு, திருமண் போன்ற சமயச் சின்னங்களை மறுப்பதற்குக் காரணம் என்னவென்ருல், அந்தச் சமயச் சின்னங்களுக்குத் தனிப்பண்புகளும், அறிவும், ஆற்றலும் இயல்பாகவே உள்ளன என்று சமயச் சார்புடையோர் சொல்லி வருகின்றனர்; அது பொருந்தாது என்று சொல்லி மறுக்கிருேம்.

திருநீறு—திருமண் ஆகியவை தீராத நோய்களை எல்லாம் தீர்த்து வைக்கும் என்றும், 'பாவங்'களைப் போக்கிப் 'புண்ணியங்'களைத் தேடித்தரும் என்றும், 'மோட்சத்'தைத் தரும் என்றும், வறுமையைப் போக்கி வளத்தை உண்டாக்கும், நீண்ட ஆயுளைத் தரும் என்றும், பிள்ளையில்லாதவர்களுக்குப் பிள்ளையைக் கொடுக்கும் என்றும், 'பேய்,' 'பூதம்,' 'பிசாசு'களை விரட்டும் என்றும், எலும்பைப் பெண்ணுருவாக ஆக்குதல்—ஏட்டைச் எதிரேறிச் செல்லசெய்தல்—கல்லானையைக் கரும்பு தின்னச் செய்தல்—நரியைப் பரியாக்குதல்—இறந்தவர்களை எழுப்புதல்—கொடுநோயைப் போக்குதல் போன்ற அற்புதங்களையெல்லாம் செய்யும் என்றும் இன்னும் ஏதேதோ சொல்லிப் பிதற்றுகின்றனர் சமயச் சார்புடையோர். திருநீற்றுக்கும் திருமண்ணுக்கும் இப்படிப்பட்ட தன்மைகள் உண்டு என்று சமயச் சார்புடையோர் வலியுறுத்தும்போதுதான் அவற்றைக் கேலிச்சிரிப்பால் ஒதுக்கித்தள்ளி மறுத்துரைக்க வேண்டிய இன்றியமையாமை பகுத்தறிவாதிகளுக்கு ஏற்படுகிறது.

திருநீற்றையும் திருமண்ணையும், நெற்றியிலும், உடலிலும் பூசிக்கொள்வதன் மூலமும், போட்டுக்கொள்வதன் மூலமும், நெற்றியிலும் உடலிலும் உள்ள தீநீரை வாங்குவதற்கு அவைபெரிதும் பயன்படுகின்றன என்று அவைகளுக்கு 'அறிவியல்' முலாம்பூசிப், 'பகுத்தறிவுச் சந்தை'யில் விற்க சில சமயவாதிகள் அரும்பாடுபடுகின்றனர். தீநீரை வாங்குவதுதான் திருநீறு, திருமண் ஆகியவற்றின் நோக்கமென்ருல், ஒருவனுக்கு உடலில் எங்கெங்கே தீநீரும், வேர்வையும் வழிகின்றனவோ, அங்கெல்லாம் திருநீற்றையும், திருமண்ணையும் பூசிக்கொள்ள முற்பட்டால், அதற்காகச் சமயவாதிகள் சினங்கொள்ளக் கூடாதல்லவா? ஒருவன் சிறுநீரும், மலமும் வெளிப்படுகின்ற

உறுப்புகளிடத்து வேர்வை வடிகின்றது என்று கருதி குன்றக்குடி அடிகளாரிடத் திருநீறு வாங்கி அவ்விடங்களில்பூசிக்கொள்கிறன் என்ருல், உடனே சைவசமயவாதிகளுக்குச் சினம் பொங்குகிறது. ஏனென்றால், அவர்கள் திருநீற்றுக்குத் 'தெய்வீகம்' உண்டு என்று கூறுகிறர்கள்; அதனை வெறும் அறிகுறி என்றே அல்லது சின்னம் என்றே கருதுவதில்லை.

திருநீற்றை அல்லது திருமண்ணை ஏதோ ஒன்றின் அறிகுறியாகவோ அல்லது சின்னமாகவோ சமயவாதிகள் கருதிக்கொள்வதைத் தவறு என்று நாம் கூற முன்வரவில்லை. அவறறிற்குக் கற்பிக்கப்படும் கருத்தைக் காரண காரிய விளக்கங் காட்டித் தவறு என்று எடுத்துக்காட்டி மறுக்க எப்பொழுதும் முனைந்து நிற்கவே செய்கிறோம்.

திருநீற்றையும் திருமண்ணையும் சமயவாதிகள் வெறும் அறிகுறிகள் என்றே அல்லது சின்னங்கள் என்றே மட்டும் கருதுவதில்லை; அவற்றை வல்லமை பொருந்திய அறிவாற்றலுடைய பொருள்கள் என்றே கருதுகிறர்கள். அந்தத் தன்மைகள் அவைகளுக்கு இல்லை என்பதைத்தான் பகுத்தறிவுவாதிகள் எடுத்துரைத்து, அவைகளை மறுத்துப் பேசுகிறர்கள்.

கறுப்புச்சட்டை என்பது தாழ்நிலைக் காட்டும் ஒரு அறிகுறி என்றுதான் பகுத்தறிவுவாதிகள் கருதுகிறர்களே ஒழிய, அது வல்லமை பொருந்தியது என்று கருதுவதில்லை. அதுபோல திருநீறும் திருமண்ணும் வெறும் அறிகுறிகளே ஒழிய, அது வல்லமை பொருந்தியவை அல்ல என்று கூறிடச் சமயவாதிகள் ஒப்புவார்களா? அப்படியில்லையாயின் கறுப்புச் சட்டையோடு திருநீற்றையும், திருமண்ணையும் ஒப்பிட்டுப் பார்ப்பது அறிவுடைமையாகாது.

திருநீற்றைப் பொறுத்தும், திருமண்ணைப் பொறுத்தும் பகுத்தறிவுவாதிகள் மறுத்துரைப்பது, அவற்றின் அறிகுறித்தன்மைகளை அல்ல, அவற்றின் வல்லமைத் தன்மைகளைத்தான் என்பதை அருள்நெறித் திருக்கூட்டத்தார் உணர வேண்டும்.

திருநீற்றுக்கும், திருமண்ணுக்கும் உள்ளபடியே வல்லமை உண்டென்றால் அவற்றைப் பூசிக்கொண்டு, சமயவாதிகள் மிக்க நெருப்பையும், மிக்க மின்சாரத்தையும் நெருங்கிக் காட்டட்டுமே! நெருப்பும் மின்சாரமும் அவர்களைத் தீண்டுகிறதா இல்லையா என்று பார்ப்போம்! திருநீற்றின் 'மகிமை'யையும்—திருமண்ணின் 'மகிமை'யையும் கட்டுக்கதைகளாக வேண்டுமானல் கதைத்துக்கொண்டிருக்கலாமேயல்லாமல், அவற்றை நடைமுறைப்படுத்திக் காட்ட முடியாதே! அப்படிப்பட்ட திருநீற்றின்—திருமண்ணின் 'மகிமை'களை மறுத்துரைப்பதில் தவறு என்ன இருக்கிறது?

வினு: தமிழ்நாட்டில் புராணங்களை ஒழிக்கப் பாடுபடுகிறவர்கள் ஐரோப்பிய புராணங்களை அள்ளிக் கொண்டு வருவதன் அர்த்தம் என்ன? தமிழ்நாட்டில் இருக்கின்ற புராணங்கள் போதா என்று ஐரோப்பியப் புராணங்களை இறக்குமதி செய்கிறர்கள்? அதுவும் பல நூற்றுண்டுகளாக புதைக்கப் பெற்றுப் பூத்துப் போன பண்டைய புராணங்களுக்குப் புத்துயிர் அளிப்பது, புராணங்களை ஒழிக்கும் வழியா அல்லது பக்குவமற்ற பள்ளி மாணவர்களின் சிருங்காரச் சுவையை வளர்க்கும் வழியா?" என்று சி. ம. விசுவாசப் பாதிரியார் எழுதியுள்ளாரே அதுபற்றிய கருத்து என்ன?

விளக்கம்: அறிஞர் அண்ணு அவர்கள் எழுதிய 'மாஜிக் கடவுள்' என்னும் நூலை ஆதாரமாக வைத்துக்கொண்டு, "ஐரோப்பிய புராணங்களை அள்ளிக்கொண்டு வருவதன் அர்த்தம் என்ன?" என்று விசுவாசப் பாதிரியார் கேட்கிறர். அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு விசுவாசப் பாதிரியார் இடர்ப்படுவது உண்மையிலே நமக்குக் கழிவிரக்கத்தைத் தருகிறது.

ஐரோப்பிய புராணங்கள், அங்குள்ள அறிவியலறிவுடைய மக்களால், உண்மை வரலாறுகளாகக் கருதப்படாமல், அவையெல்லாம் வெறும் கட்டுக்கதைகளாகும் என்று எப்படி ஒதுக்கிவைக்கப்பட்டனவோ, அப்படியே இங்குள்ள புராணங்களும், இங்குள்ள அறிவுடைய மக்களால், வெறும் கட்டுக்கதைகளென ஒதுக்கிவைக்கப்படவேண்டும் என்பதை உணர்த்தவும், ஐரோப்பாவிலிருந்த கடவுள்கள் எப்படி 'மாஜிக் கடவுள்களாக' ஆக்கப்பட்டனவோ, அவற்றைப்போலவே, இங்கு இருந்துவரும் கடவுள்களும் 'மாஜிக் கடவுள்களாக' ஆக்கப்படவேண்டும் என்பதை, வலியுறுத்தும் அறிஞர் அண்ணுவின் 'மாஜிக் கடவுள்' என்ற நூல் வெளிவந்தது. ஐரோப்பாவின் கடவுள்கள் என்னவாக இருக்குமோ, எப்படியாக இருக்குமோ என்று 'பயபக்தியுடன்' ஐயப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு, 'பயபக்தியை'ப் போக்கவும், ஐயப்பாட்டை நீக்கவும், தெளிவைப் பயக்கவும் 'மாஜிக் கடவுள்கள்' என்ற நூல் பெரிதும் பயன்படுகிறது என்னலாம்.

ஐரோப்பாவின் புராணங்கள், தமிழகத்தில் மக்களின் வழிபாட்டிற்குரிய புராணங்களாக

இருக்கட்டும் என்று கருதி அறிஞர் அண்ணு அவர்கள் அந்த நூலை எழுதியிருப்பதாக நினைத்துக்கொண்டு விசுவாசப்பாதிரியார் பிதற்றுகிருர். அந்த நூலைப்படிப்பவர்கள், ஐரோப்பியப் புராணங்களை இங்கு நிலைநாட்ட வேண்டும் என்ருே, அந்தக் கடவுள்களை இனி வழிபடவேண்டும் என்ருே ஒருநாளும் முடிவு செய்யமாட்டார்களே! அதற்குத் தூண்டு கோலாக அமைவது அல்லவே அந்த நூல்; அதற்கு மாருன எண்ணத்தையல்லவா படிப் போர் உள்ளத்தில் ஊட்டும்? ஐரோப்பியக் கடவுள்களின் நிலையே அப்படி மாஜித்தன்மை ஆயிற்றென்ருல், இங்குள்ள கடவுள்களின் நிலையே அப்படிப்பட்ட மாஜித்தன்மைக்கு உள்ளாக்கப்பட வேண்டியதுதானே என்ற எண்ணத்தைப் படிப்போர் உள்ளத்தில் ஊட்டுவதற்காகவே 'மாஜிக்கடவுள்கள்' என்ற நூல் எழுந்தது. அந்த எண்ணத்தை வளர்ப் பதற்குத்தான் அந்நூல் பயன்பட்டு வரு கிறதே ஒழிய, ஐரோப்பியக் கடவுளுக்கு இங்கு மதிப்பு வாங்கித்தர அது ஒருநாளும் பயன்பட வில்லை. தமிழகத்திலுள்ள புராணங்களின்— கடவுள்களின்மீது தமிழக மக்கள் கொண் டுள்ள 'பயபக்தி'யை அகற்றுவதற்குத்தான், மதிப்பற்ற ஐரோப்பியப் புராணங்களும்— மாஜிக்கடவுள்களும் தமிழக மக்கள் முன்ஞல் எடுத்துக்காட்டாக அறிஞர் அண்ணுவால் கொண்டுவந்து நிறுத்தப்படுகின்றன என் பதை விசுவாசப்பாதிரியார் அறிந்து தெளி வடைவாராக!

"தமிழ்நாட்டில் இருக்கும் புராணங்கள் போதா என்று ஐரோப்பியப் புராணங்களை இறக்குமதி செய்கிருர்கள்" என்று அந்தப் பாதிரியார் கேட்கிருர், சிறுபிள்ளைத்தனமாக வெறும் கூட்டல் கணக்குப் போட்டு, இங் குள்ள புராணங்களுக்கும், ஐரோப்பிய புரா ணங்களுக்கும் நாம் மதிப்பளிக்கத் துடித்துக் கொண்டிருப்பதுபோல் எண்ணிக்கொண்டு விசுவாசப் பாதிரியார் புலம்புகிருர். ஐரோப் பிய புராணங்களின் அறியாமையும், மூடத் தனத்தையும், குருட்டு நம்பிக்கையையும் விளக்குவதன் மூலம் அவைகளின் வரிசைக்கு இங்குள்ள புராணங்களையும், கடவுள்களையும் கொண்டுபோய் நிறுத்துகிருேம் என்பதைப் பாதிரியாரால் ஏனே புரிந்துகொள்ள முடிய வில்லை? அவர் தம் நிலை இரங்கத்தக்கதாக இருக்கிறது.

பகுத்தறிவுவாதிகள் புதைக்கப்பட்டுப் போன புராணங்களுக்குப் புத்துயிர் அளிப்ப தாகப் பாதிரியார் குற்றஞ் சாட்டுகிருர். புரா ணங்கள் பலகாலப் பழைமையில் புதைக்கப் பட்டுப்போனுலும், அவைகளிடத்து மக்கள் கொண்டுள்ள 'மதிப்பு' புதைக்கப்பட்டுவிட்ட தாகக் கூறமுடியாது. புதைக்கப்பட்டுபோன புராணங்களிலும், சமயவாதிகளால் மறைத்து வைக்கப்பட்ட புராணங்களிலும் ஏராளமான 'மகிமை' இருப்பதாகத்தான், சமயச்சார் புடைய மக்கள் இன்னமும் எண்ணிக்கொண் டிருக்கிருர்கள். அந்த 'மகிமை'பற்றிய 'பக்தி' மக்களுடைய உள்ளத்திலிருந்து அகற்றப்பட வேண்டுமானுல், அந்தப் புராணங்களின் இழி நிலையும், மூடத்தனமும், குருட்டு நம்பிக்கையும் அறியாமையும் மக்கள்முன் கொண்டுவந்து நிறுத்தப்பட வேண்டியது இன்றியமையாத தாகும். அத்தகைய சீரிய பணியினைத்தான் பகுத்தறிவுவாதிகள் செய்து வருகிருர்கள். "இதுதான் புராணங்களை ஒழிக்கும் வழியா?" என்ருல், "ஆம்! ஆம்!" என்றுதான் அழுத் தந் திருத்தமாகக் கூறுகிருேம். புராணங்களை அலசிக் காட்டும்போது விசுவாசப் பாதிரியா ரின் சமயக் கருத்துக்களும், கடவுள் நம்பிக்கை யும் சேர்ந்து சுக்கு நூருகத் தவிடுபொடியாக் கப்படுவதைக் கண்டு அவர் கலங்குகிருர் போலும்! புராணங்களின் வண்டவாளங்களை விரித்துரைப்பது, அவைகளுக்குப் புத்துயிர் அளிப்பதாகும் என்று பாதிரியார் எண்ணு கிருர் போலும்! அவர்தம் மடமையை என் னென்று சொல்லுவது? புராணங்களின் வண்டவாளங்களை விரித்துரைப்பது, அவை களின் 'மகிமை'யைப் போக்கும் பணியே தவிர, அவைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் பணி ஆகாது. அது புத்துயிர் அளிக்கும் பணிதான் என்ருல், சமயவாதிகள், பகுத்தறிவுவாதி களின் பணியைப் போற்றி வரவேற்கலாமே!

புராணங்களை விரித்துரைப்பது பக்குவம் அற்ற பள்ளி மாணவர்களின் சிருங்காரச் சுவையை வளர்க்கும்வழி என்னும் கருத் படப் பாதிரியார் புலம்புகிருர். அந்த அளவுக் குச் சிருங்காரச் சுவையைப் பாதிரியாரின் பரம்பரைச்சேர்ந்த அந்தக் காலத்துக் குருமார் கள் புராணங்களில் கொட்டிவைத்திருக்கிருர் கள் என்பதை விசுவாசப் பாதிரியாரே மறை முகமாக ஒப்புக்கொள்கிருர். பக்குவம் அற்ற பள்ளி மாணவர்களின் சிருங்காரச் சுவையை வளர்க்கும் 'சரக்கு', சமயங்களிடத்தில் ஏராள மாக இருக்கிறது என்பதைப் பாதிரியார் ஒப்புக்கொள்கிருர். அதை அம்பலப்படுத் திக்காட்டுவதும், அத்தகைய புராணங்களின் மகிமையைப் போக்குவதும் குற்றம் என்கிருர்; ஆனுல், அந்தச் 'சரக்கு' சமயங்களிடத்தில் இருப்பது குற்றமில்லையாம்! என்னே பாதிரி யாரின் போக்கு!

'பக்குவம் அற்ற பள்ளி மாணவர்கள் சிருங்காரச் சுவையை வளர்ப்பதற்கான வழிகள்' பகுத்தறிவுவாதிகளின் பேச்சிலும்,

எழுத்திலும் இருக்கின்றனவா? அல்லது புராணங்களிலும், திருக்கோவில்களிலும், மாதாகோவில்களிலும், திருவிழாக்களிலும், மடங்களிலும் இருக்கின்றனவா? என்பதைப் பொதுமக்கள் நன்கு அறிந்துகொள்ளலாம்.

சிருங்காரச்சுவை புராணங்களில் இருப்பது தவரு? அல்லது அதனைச் சுட்டிக்காட்டிப் புறக்ணிப்பது தவரு? திருடனித்தில் திருட்டுப்பண்பு இருப்பது தவரு? அல்லது அந்தப்பண்பைச் சுட்டிக்காட்டி வெறுப்பது தவரு? இருப்பது தவறல்ல, சுட்டிக்காட்டுவதுதான் தவறு என்கிருர் விசுவாசப்பாதிரியார்! அவரது நிலை ஏளனச்சிரிப்புக்கு இடமாகிறது, அவ்வளவுதான்!

வினு: **தமிழகம் திராவிடக் கூட்டாட்சியில் என்னென்ன உரிமைகள் பெறுமோ அந்த உரிமைகளை எல்லாம் இந்தியக் கூட்டாட்சியில் பெற்ருல், இந்தியப் பேரரசுடன் இணைந்து வாழுமா? இதற்குத் தி. மு. கழகம் ஆதரவு தருமா?**

விளக்கம்: திராவிடக் கூட்டாட்சியின் கீழ்த் தமிழகம் பெறக்கூடிய அவ்வளவு உரிமைகளையும், வாய்ப்புக்களையும், வசதிகளையும், உறவுமுறைகளையும் இந்தியப் பேரரசின் கீழ்த் தமிழகம் பெறமுடியும் என்ருல், அத்தகைய நிலை வெறுத்தொதுக்கப்படவேண்டிய ஒன்ருக இருக்காது. ஆனல் இன்றைய சூழ்நிலையில் அத்தகைய நிலை உருவாகுமா என்பதுதான் கேள்வி?

இந்தியப்பேரரசு என்ன, ஆசியாப்பேரரசானுலும் அல்லது உலகப்பேரரசானுலும் அவற்ருேடு இணைந்து வாழ்வதால், தமிழகம் திராவிடக் கூட்டாட்சியின்கீழ்ப் பெறக்கூடிய எல்லா உரிமைகளையும், வாய்ப்புக்களையும், வசதிகளையும், உறவுமுறைகளையும் பெற முடியும் என்ருல், அந்தநிலை எப்பொழுதும் வரவேற்கத்தக்கதாகவே இருக்கும்.

இன்றைய நிலையில் திராவிடக்கூட்டாட்சியில் நிலவக்கூடிய உறவுமுறைகள் இந்தியப் பேரரசின்கீழ் ஏற்படாது என்பது திண்ணம். ஏனெனில் தமிழர்—தெலுங்கர்—கன்னடியர்—மலையாளிகள் ஆகியோரிடையே காணப்படும் ஒற்றுமைக்கான—கூட்டுக்கான—உறவுக்கான பொதுமைப் பண்புகள்—நிலைமைகள், இந்தியாவை ஒன்ருக வைத்துப்பார்க்கும்போது உறுதியாக ஏற்படாது. மேலும் தனித்திராவிடக் கூட்டாட்சி உலக அரங்கில் தனித்துப் பெறும் நன்மைகளைப்போல், இந்தியப்பேரரசின் கீழிருந்து பெறமுடியாது. இன்றைய உலகச் சூழ்நிலையை வைத்துப் பார்க்கும்போது, தனித்திராவிடக் கூட்டாட்சி, இந்தியக் கூட்டாட்சியைவிட எவ்வளவோ நன்மை பயப்பதாகத்தினிருக்கும்.

உலக நாடுகள் ஒன்ருக ஆகும்போது வேண்டுமானல் திராவிடக் கூட்டாட்சியைக் கலைத்துவிட்டு, உலகக் கூட்டாட்சியோடு இணையலாமே ஒழிய, அதுவரையில் திராவிடக் கூட்டாட்சியோ அது இயலவில்லையானுற் தனித் தமிழகமோ தனியாக இருப்பது எல்லாவகையிலும் நன்மை பபப்பதாகும்.

திராவிடமோ அல்லது தமிழகமோ தனியாகப் பிரிந்தாலும் 'ஐக்கிய நாடுகள் உறவு' போன்ற உறவுமுறையை ஏற்படுத்திக்கொள்வது இயல்வதொரு செயலேயாகும்.

* * *

வினு: **தமிழ்நாடு ஒரே நாடாகக் கருதப்பட்டதற்கு இலக்கியத்தில் ஆதாரமே இல்லை என்று தோழர் சி. சுப்பிரமணியம் கூறுகிருரே, அதுபற்றிய கருத்து என்ன?**

விளக்கம்: தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் 'நிதியமைச்சரே' ஒழிய, 'மதியமைச்சர்' அல்ல என்பதை இந்தக் கூற்றின் மூலம் தெளிவுபடுத்திக் காட்டிவிட்டார்.

"நுணலும் தன் வாயால் கெடும்" என்னும் பழமொழிக்கிணங்க, தோழர் சுப்பிரமணியம் தமிழிலக்கியம்பற்றிய தமது வெற்றறிவை இப்பொழுது வெளிப்படையாகக் காட்டிவிட்டார். "ஆப்பை அசைத்துவிட்டு அகப்பட்டுக்கொண்ட குரங்கு"போல் இப்பொழுது இடர்ப்படுகிருர். தோழர் ஆச்சாரியார் அவரை "அனுமான்" என்று குறிப்பிட்டது, இவ்வகையில் பொருந்தும் போலும்.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

என்று தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுகிறது.

"இமிழ்கடல் வரைப்பில் தமிழகம் கேட்ப"

என்று புறநானூற்றுச் செய்யுள் குறிப்பிடுகிறது.

"நெடியோன் குன்றமும் கொடியோள் பௌவமும்
தமிழ்வரம்பறுத்த தண்புனல் நன்ஞடு"

என்று சிலப்பதிகாரம் முழங்குகிறது.

"வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே"

என்று சிகண்டியார் கூறுகிருர்.

"குமரிவேங்கடங் குணகுட கடலா வெல்லை
மண்டிணி மருங்கில் தண்டமிழ் வரைப்பு"

என்ருர் மற்ருெரு புலவர்.

"செந்தமிழ்நாடு எனும் பேதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே"

என்ருர் பாரதியார்.

இவைபோன்று பலப்பல எடுத்துக் காட்டலாம், என்னபயன்? தோழர் சுப்பிரமணியம் அவர்களுக்குப் 'புலப்படவேண்டுமே! அவர்தான் புரிந்துகொள்ளவே மறுக்கிருரே!

— **இரா. நெடுஞ்செழியன்.**

1103

அறனும் அல்லை ஆக்கமும் அல்லை

[இரா. நெடுஞ்செழியன்]

தலைவி தக்க பருவம் எய்திவிட்டாள், அவளை இனி வெளியே விடுதல் ஆகாது என்று கருதி நற்றாய் அவளை இல்லிலேயே இருக்கும்படிப் பணித்துவிடுகிறாள். செவிலித் தாய் தலைவிக்குக் காவலாக இருந்து, அவள் வெளியே போய்விடாதவாறு பாதுகாத்து வருகிறாள்.

சிறைப்படுத்தப்பட்டது தலைவிக்கு மிக்க வருத்தத்தைத் தருகிறது. தன் ஆருயிர்க் காதலனான தலைவனை இனிக் காணமுடியாதே என்றும், களவொழுக்கத்தில் பெற்றுவந்த இன்பத்தை இனிப்பெறமுடியாதே என்றும் எண்ணி எண்ணி அவள் ஏங்குகிறாள். தலைவியின் நிலை தோழிக்கும் மிக்க துயரத்தைத்தருகிறது. தோழி, தலைவியைத்தேற்ற எவ்வளவோ முறைகளில் ஆறுதல் சொல்லிப் பார்க்கிறாள். தலைவி எப்பொழுதும் துன்பக் கடலிலேயே ஆழ்ந்துவிடுகிறாள்.

தலைவன் பகற்குறி இரவுக்குறியிடங்களில் அன்றாடம் வந்து, நீண்டநேரம் காத்திருந்து, தலைவியும் தோழியையும் காணாமல், ஏமாற்றத்துடன் வீடுதிரும்பிய வண்ணமாக இருந்து வருகிறான். திடீரென்று, தலைவி, குறியிடங்களுக்கு வராமல் நின்றுபோனதற்கு என்ன காரணம் என்று தலைவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. தன்னைத் தலைவி வெறுத்துவிட்டாளோ? அல்லது வரும் வழியில் அவளுக்குக் கொடிய விலங்குகளால் துன்பம் ஏதேனும் நேரிட்டதோ? அல்லது தமது களவொழுக்கத்தை அவளது தாய்தந்தையர் கண்டுபிடித்து அவளுக்குக் கொடுந்தண்டனை ஏதும் கொடுத்துவிட்டார்களோ? என்று பலவாறு எண்ணி எண்ணி ஏங்குகிறான்.

தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் காணமுடியாமல் துக்கத்திலும் துயரத்திலும் உழன்றுகொண்டிருக்கின்றனர்.

ஒருநாள் இரவு வானம் இருண்டு கன்னங் கரேரென்று கறுத்துக் காணப்படுகிறது. தலைவனைக் காணாமல் வருந்தும் தலைவிக்குத் தோழி ஆறுதலுரை பகன்றுகொண்டிருக்கிறாள். கறுகறுத்தவானில் மின்னலும், இடியோசையும் தொடர்ந்து எழும்பியவண்ணமிருக்கின்றன. தலைவியும் தோழியும் சாளரத்தின் வழியாக எட்டிப்பார்க்கின்றனர். தலைவனின் உயர்ந்த மலைக்குன்றுகளின் முகடுகளைச்சுற்றி முகிற்கூட்டங்கள் சூழ்ந்திருப்பதையும், அங்குத் தோன்றிடும் மின்னல் ஒளி எங்கணும் பாய்ந்து பரவி நிற்பதையும், கொடி நெளிவதைப்போல் மின்னல்கள் நெளிந்து நெளிந்து தோன்றி மறைவதையும், மலைக் குன்றுகளில் சோவென்று மறை பொழிவதையும், அது அருவியாக இறங்கிப், பெருவெள்ளமாகப் பாய்ந்து ஓடுவதையும் பார்க்கிறாள். இந்தக்காட்சிகள் தலைவனைப்பற்றிய நினைவு அலைகளைத் தலைவியுள்ளத்தில் கிளறிவிடுகின்றன. அத்தகைய ஏக்க நினைவுகளோடு தலைவி உறக்கங்கொள்கிறாள்.

மறுநாள் பொழுதுவிடிந்தவுடன், தலைவியும் தோழியும் எழுந்து வீட்டின் புறக்கடையிலிருந்து பார்க்கும்போது ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

"ஏடி! வெள்ளம் எப்படிப் பெருக்கெடுத்து ஓடுகிறது பார்த்தாயாடீ;"

தோழி : "ஆமாமடீ! இரவு அவ்வளவு மழை பெய்திருக்கிறது!"

தலைவி : "இவ்வளவு வெள்ளமும் எங்கிருந்து வருகிறது?"

தோழி : "எல்லாம் தலைவனின் மலைக்குன்றுகளிலிருந்து வருகிறது!"

தலைவி : "எல்லாமுமா அங்கிருந்து வருகிறது?"

தோழி : "ஆமாம்! அங்குதானே இரவெல்லாம் இடியோடும், மின்னலோடும் பெருமழை பெய்யக்கண்டோம்!"

தலைவி : "அந்த வெள்ளத்தில் விழுந்து நீராட எனக்கு எவ்வளவு ஆவலாக இருக்கிறது தெரியுமா? தலைவனின் குன்றுகளிலிருந்து வரும் நீரில் மூழ்குவதே எனக்குத் தலைவரைக்கட்டியணைப்பதுபோல் இருக்குமடீ!"

தோழி : "உனக்கு ஆவல் இருக்கிறது, அளவுக்கு மீறி. உன்னை வெளியே அனுப்ப யார் ஆயத்தமாக இருக்கிறார்கள்?"

தலைவி : "நாம் சென்று நீராடிவர வழியே இல்லையாடீ?"

தோழி : "எப்படி வழிகிடைக்கும்? செவிலித் தாய்தான் இமைகொட்டாமல் உன்னைக் காவல் காத்துவருகிறாளே!"

தலைவி : "இளமங்கையர் தமது தோழிமாரோடு சென்று பாவை விளையாட்டு விளையாடியும், நீராடியும் வர இடமளிக்காமல், அவர்களை வீட்டில் சிறைப்படுத்திவைப்பது எப்படியடீ அறநெறியாகும்?"

தோழி : "அது அறநெறியல்ல என்று நீயும் நானும் கருதுகிறோம்! ஆனால் அப்படிக் கருதவேண்டிய அன்னை கருதவில்லையே!"

தலைவி : "அறநெறிக்குப் புறம்பாக நடந்துகொண்டால் செல்வம் தேய்ந்துபோகும் என்று சொல்லுவார்களே!"

தோழி : "பலரும் சொல்கிறார்கள்தான்! இதனை அன்னையிடம் போய்ச்சொல்வது யார்?"

தலைவி : "இவற்றையெல்லாம் அறநெறியுணர்ந்த யாரேனும் அன்னையிடம் எடுத்துரைக்கமாட்டார்களா?"

தோழி : "இவற்றையெல்லாம் அன்னையிடம் எடுத்துரைத்தாலும் அவள் நம்மை நீராடப் போகவிடுவாள் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது?"

தலைவி : "அன்னை போகவிட்டால், எப்படியிருக்கும்? ஆகா! அவருடைய மலையில் பெய்யும்மழை, சிறுசிறு நுரைகளோடு நறுமணமலர்களை வாரிக்கொண்டு ஆறாகப் பெருகி வரும்போது, அந்தப்புதுநீரில் நாம் உள்ளம் மகிழ ஆடலாமல்லவா?"

தோழி : "ஆடி மகிழலாம்! சரி, அன்னையிடம் போய் அறநெறிபற்றிக் கூறுவார் யார்?"

தலைவி : "யாருமே இல்லையாடீ?"

தோழி : "ஊரில் பலர் இருக்கிறார்கள். ஆனால் நமக்கு ஆதரவு தருவார் யாருமில்லை!"

தலைவி : "அப்படியானால் நமது ஆவல் வீணே கழியவேண்டியதுதானா?"

தோழி : "வேறு வழி என்ன இருக்கிறது? வாய்பேசாமல் வீட்டிற்குள்ளேபோய் அமைதியாக இருக்கவேண்டியதுதான்!"

பிறகு தலைவியும் தோழியும் மனவருத்தத்துடன் வீட்டிற்குள் நுழைகிறார்கள்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்துத், தலைவியின் வரவைக் காணாமல் தவித்துக்கொண்டிருந்த தலைவன், தலைவியின் இருப்பிடம் சென்றே அவளைக் காணமுயலலாம் என்ற எண்ணத்துடன் வருகிறான். அப்பொழுது மாலைப்பொழுது. தலைவியும் தோழியும் வீட்டின் புறக்கடைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். தலைவனின் வருகையைத் தலைவியும் தோழியும் தொலைவிலிருந்தே பார்த்துவிடுகிறார்கள். அவனைக்காணாதவர்கள்போல் அவர்களிருவரும் வேறுபக்கம் திரும்பிக்கொண்டு ஏதோ பொதுப்படையாக உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். தலைவன், தலைவியின் வீட்டை நெருங்கிவரும்போது, தலைவியும் தோழியும் வீட்டின் தோட்டத்தில் உலாவுவதைப் பார்க்கிறான். மெல்ல நடந்து சென்று தோட்டத்தின் புறம்பே ஒரு புதரில் மறைந்துகொண்டு, தலைவியும் தோழியும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை உற்றுக்கவனிக்கிறான்.

தலைவியும் தோழியும் தம்முடைய உரையாடலைத் தலைவன் கூர்ந்து கவனிக்கிறான் என்பதை அறிந்துகொண்டு, அவன் மனதில் படுமாறு தம் உரையாடலைத் திருப்புகிறார்கள்.

தோழி : "அன்று ஆற்றில் பெருவெள்ளம் வந்ததே, அது எங்கிருந்து வந்தது தெரியுமா?"

தலைவி : "தெரியாதே! எங்கிருந்து வந்தது?"

தோழி : "அது, நமது தலைவர் இருக்கிறாரே, அவரது குன்றுகளிலிருந்து வந்தது!"

தலைவி : "அப்படியானால், நான் அதில் வீழ்ந்து நீராடி மகிழ்ந்திருப்பேனே!"

தோழி : "அதில் உனக்கென்ன தனி மகிழ்ச்சி?"

தலைவி : "அது தலைவருடைய குன்றுகளிலிருந்து வருகிறது என்றால், அதில் நான் மூழ்குவது என்றால், அவரையே நான் கட்டியணைத்துக் கொள்வதுபோலல்லவா?"

தோழி : "உனக்கு என்ன. அவரைக் கட்டி யணைப்பதில் அவ்வளவு ஆவலா?"

தலைவி : "அவர் என்னை மறந்துவிட்டாலும், என்னால் எப்படியடி அவரை மறக்க முடியும்?"

தோழி : "நீ எவ்வளவு ஆவல்பட்டாலும், நீ! தான் வீட்டைவிட்டு வெளியேற முடியாதே செவிலித்தாய்தான் உன்னைக் காவல்காத்து வருகிறாளே!"

தலைவி : "இளமங்கையரை அவர்களது தோழிமார்களோடு பாவை விளையாட்டு விளையாடவும், நீர் விளையாட்டு விளையாடவும் விடாமல், வீட்டிலேயே சிறைவைப்பது அறநெறியாகாது, அப்படிச் செய்தால் வீட்டின் செல்வமும் தேய்ந்துபோய்விடும் என்று யாரேனும் அன்னையிடம் போய்க்கூறினால், அன்னை தானாகவே நம்மை வெளியேற விடுகிறாள்!"

தோழி : "நீ கூறுகிறபடி நமக்குப் பரிந்து போய் அன்னையிடம் நமக்கு ஆதரவாகக் கூறுபவர்கள் யார் இருக்கிறார்கள்? அப்படியே யாரேனும் இருந்தாலும் அன்னை நம்மை வெளியே செல்ல விடுவாளா என்பது ஐயப்பாடே!"

தலைவி : "அப்படியானால் எனது ஆவல் வீணே கழிய வேண்டியதுதானா?"

தோழி : "இந்த வகையில் வீணே கழிந்தது என்றுதான் சொல்லவேண்டும்!"

தலைவி : "அப்படியானால் வேறுவகை என்னடி இருக்கிறது?"

தோழி : ", தலைவர் முறைப்படிவந்து உன்னைத் திருமணம் செய்துகொண்டுவிட்டால், உனக்குள்ள இடையூறுகளெல்லாம் தூள் தூளாய்ப் பறந்துவிடுகின்றன!"

தலைவி : "அவர்தான் என்னைப் பார்க்கவே வரவில்லையே! அவர் என்னைத் திருமணம் எங்கே செய்துகொள்ளப் போகிறார்?"

தோழி : "அவர் இவ்வளவு நாட்களாக வராமலிருப்பதைக் கொண்டே, திருமணத்திற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருக்கிறார் என்ற முடிவுக்கு வரவேண்டியதுதான்!"

இவ்வளவையும் மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்த தலைவன், தலைவியைச் சிறைப்படுத்தியிருப்பதால் அவளுக்கு நேர்ந்துள்ள துன்பங்களையும், அத்துன்பங்களைத் துடைப்பதற்கான வழி தலைவியைத்தான் முறைப்படி திருமணம் செய்துகொள்வதுதான் என்பதையும் அறிந்து கொள்கிறான். அவளைத் திருமணம் செய்துகொள்வதற்கான ஏற்பாட்டுடன் திரும்புவது என்ற எண்ணத்துடன் தலைவன் உடனே அவ்விடம்விட்டு விறுவிறு என்று அகன்று செல்கிறான்.

தலைவன் வெடுக்கென்றெழுந்து விறுவிறு என்று நடந்துகொள்வதைப் பார்த்த தலைவியும் தோழியும், தம் எண்ணம் நிறைவேறிவிட்டது என்ற மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்துத் தோட்டத்தில் ஓடி விளையாடுகிறார்கள்!

* * *

இது நற்றிணை 68 ஆம் செய்யுளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த நற்றிணைச் செய்யுள் குறிஞ்சித் திணையின்பாற்பட்டுச் சிறைப்புறமாக நிற்கும் தலைவனுக்குத் தோழி, தலைவிக்கு உரைப்பவள்போல மறைமுகமாக உணர்த்துவதாகும். இதனை இயற்றியவர் பிரான்சாத்தனார் என்ற புலவராவார். இவரைப்பற்றிய விரிவான குறிப்பு எதுவும் அகப்படவில்லை. இவர் பாடியதாக இந்தச் செய்யுள் ஒன்றுதான் அகப்பட்டுள்ளது.

விளையா(டு) ஆயமொடு ஓரை ஆடாது
இளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல்
அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்மெனக்
குறுநுரை சுமந்து நறுமலர் உந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண ஆடுகம்

வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே
செல்கென விடுநள்மன் கொல்லோ எல்லுமிழ்ந்து
உரவுரும் உரறும் அரையிருள் நடுநாள்
கொடிநுடங் கிலங்கின மின்னி
ஆடுமழை இறுத்தன்றவர் கோடுயர் குன்றே.

[நற்றிணை—68]

[பொழிப்புரை: அவரது முடியுயர்ந்த குன்றம் ஒளியை எங்கும் பரப்பி வலிய இடி முழங்குகின்ற இரவின் நள்ளிருளில் கொடி அசைந்தாற்போல விளங்கினவாய் மின்னி இயங்குகின்ற முகில் தங்கி மழையைப் பெய்கின்றது; இப்பொழுது இளமங்கையர் தாம் விளையாடுகின்ற தோழியர் கூட்டத்தோடு பாவை விளையாட்டு விளையாடாமல், வீட்டில் இற்செறிக்கப்பட்டிருத்தலானது அறநெறியன்று, அன்றிச் செல்வமும் தேய்ந்துவிடும்' என்று விரைந்து சென்று அன்னையை வணங்கிச் சொல்லுபவரை நாம் பெறுவோமாயின் அவ்வன்னை நம்மை நோக்கி நீவிர் செல்வீராகவென்று விடுப்பாளோ? அங்ஙனம் விடுப்பின் அவர் மலையில் பெய்யும் மழை குறிய நுரைகளைச் சுமந்துகொண்டு நறிய மலர்களுடனே ஆற்றிற் பொங்கி வருகின்ற புதுநீரை உள்ளம் மகிழ நாம் ஆடுவோம்; அங்ஙனம் கூறுவாரைப் பெற்றிலேமாதலால் நாம்கொண்ட அவா வீணே கழிந்தது. ஆயம்—கூட்டம்; ஓரை–பெண்கள் விளையாடும் பாவை விளையாட்டு; இளையோர்–இளமங்கையர்; உந்தி - ஆறு; ஆக்கம் - செல்வம்; எல் - ஒளி.]

"இளமங்கையரை வீட்டிலே சிறைப்படுத்தி வைப்பது அறமுமல்ல, அது ஆக்கமுந் தராது" என்று அன்னையிடம் கூறும்படியாகத் தலைவி கூறுவது அவளது மனநிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாகும். தலைவி தலைவனையடைய எவ்வளவு துடிதுடிக்கிறாள் என்பதும், அந்த வாய்ப்பு ஏற்படாதவாறு அன்னை அவளைச் சிறைப்படுத்தியிருப்பது அவளுக்கு எவ்வளவு வேதனையைத் தருகிறது என்பதும் அந்தக் கூற்றால் இனிது புலப்படுகிறது. புலவரின் இந்த நயம் மிகவும் போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

காதலன் காதலியர்க்கு அவர்களோடு தொடர்புடைய பொருள்களைக் காண்பதும், அவற்றைப் பயன்படுத்துவதும் மிக்க மகிழ்ச்சியையளிப்பனவாகும் என்பது, தலைவி தலைவனின் குன்றத்திலிருந்துவரும் மழைநீர் வெள்ளத்தில் நீராட ஆவாவுறுவதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

பண்டைய மகளிர் விளையாட்டுக்களுள் பாவை விளையாட்டு என்பதும் ஒன்று என்று தெரிய வருகிறது. மகளிர் கூட்டமாகக் கூடி விளையாடுவதும், நீராடுவதும் பழக்கங்களாக இருந்து வந்திருக்கின்றன.

புயற்காற்றின் வலிமை

பொதுவாக அமெரிக்கா போன்ற பெரிய நாடு ஐம்பது ஆண்டு காலத்தில் மின்னாற்றல் (Electricity) மூலம் எவ்வளவு ஆற்றலைச் செலவழிக்குமோ அதைவிட மிகவான ஆற்றலை ஒரு பெரும் புயற்காற்று ஒரு நிமிடத்தில் செலவழிக்கிறது. பல அணுக்குண்டுகள் வெடித்தலால் ஏற்படும் ஆற்றலைக்காட்டிலும் மிகவான ஆற்றலைப் பெரும் புயற்காற்று ஒரு நொடிப்பொழுதில் செலவழிக்கிறது.

—ராபர்ட் பிலம்ப்
(Robert Plumb)

சிறுகதை

★ உதிர்ந்த மலர் ★

ராணி

கம்பீரமாகக் காட்சியளித்த அந்த வெள்ளைக் கட்டிடம்தான் 'நரசு நர்சிங்ஹோம்.' அதன் மாடியில் மூலையிலிருந்த ஒரு அறையில் உட்கார்ந்து டாக்டர் தேவகி அவசர அவசரமாக ஏதோ குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள். மேஜையின்மீது பலகாகிதங்கள் பரப்பிக் கிடந்தன. மற்றபடி அந்த அறை தூய்மையாகவும் சுத்தமாகவும் இருந்தது. குளிர்ந்த காற்று வீசியதால் மின்சார விசிறியை நிறுத்திவிட்டு தேவகி மீண்டும் வேலையில் ஈடுபட்டாள். அப்பொழுது மணி ஐந்து இருக்கும், யாரோ வந்து கதவைத்தட்டும் சப்தம் கேட்டது.

"யாரது தாராவா?" என்றாள் தேவகி.

"ஆமாம் டாக்டர் உள்ளே வரலாமா?"

"வா"

தாரா உள்ளே வந்தாள். "ஒரு நோயாளி டாக்சியில் வந்திருக்கிறார். அவருக்கு நெஞ்சு வலியாம். படுக்க வைத்திருக்கிறேன். நீங்கள் வந்து பார்க்கிறீர்களா?"

"இதோ" என்று தேவகி கூறிவிட்டு கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு ஸ்டெதாஸ்கோப்பை கையில் எடுத்துக்கொண்டு மாடிப்படிகளைக்கடந்து, தாரா பின்தொடர கீழே வந்தாள். படுக்கை அருகே வந்து நோயாளியைப் பார்த்தவுடன், ஒருகணம் திகைத்து நின்றாள். அவளை அறியாமல் அவளது வாய் "அசோகன்" என்று முணுமுணுத்தது. அவனைத் தெரியும் என்பதை காட்டிக்கொள்ளக்கூடாது என்று நினைத்து, தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டாள்.

"தாரா இவருடன் வந்தவர்கள் எங்கே?" என்றாள் தேவகி. அப்பொழுதுதான் நோயாளி தன் கண்களைத்திறந்தான். அவன் டாக்டர் நரசிம்மனிடம் சிகிச்சை பெறவே அங்கு வந்தான். ஒரு பெண் டாக்டரைப் பார்த்ததும் அவனுக்கு எப்படியோ இருந்தது.

"யாரும் வரவில்லை நான் மட்டும்தான் ஒரு வேலைக்காரனை அழைத்துக்கொண்டு வந்தேன். டாக்டர் நரசு இல்லையா?"

"அவர் ஊருக்குப் போயிருக்கிறார். நாளை மறுநாள்தான் வருவார்." என்று கூறிவிட்டு, அவனை பரிசோதித்து, தாராவிடம் ஏதோ ஒருமருந்தை எடுத்துவரச்சொல்லி ஊசி போட்டுவிட்டு, "உங்கள் பெயரென்ன" என்று கேட்டாள் தேவகி.

"சித்தார்த்தன்" என்றான் அந்த நோயாளி.

தேவகிக்கு தூக்கிவாரிப்போட்டது. இவன் வேண்டுமென்றே தன்பெயரை மாற்றிக் கூறுகிறான் என்று நினைத்துக்கொண்டு "தாரா இவரது பெயரைக் குறித்துக்கொண்டு டெம்பரேச்சர் மற்ற விபரங்களையும் குறித்துக் கொள். நான் மறுபடியும் பத்து மணிக்கு வந்து ஒரு ஊசி போடுகிறேன்." என்று கூறிவிட்டு மாடியில் உள்ள தன் அறைக்கு வந்தாள். அப்பொழுது நன்றாக இருட்டி விட்டது. விளக்கைக்கூட போடாமல் அப்படியே சோபாவில் உட்கார்ந்துகொண்டாள். சற்றும் எதிர்பாராத விதமாக அசோகனை சந்தித்ததால் அவள் மனம் அமைதியிழந்தது. எவனை தன்வாழ்வில் சந்திக்கவே கூடாது என்று கருதியிருந்தாளோ அவனை சந்திக்கும்படியாகிவிட்டது. எல்லாவற்றையும்விட அவன் ஏன் தன்னை தெரியாதது போலவே நடிக்கவேண்டும். ஏன் தன்னைக் கண்டதும் அப்படி விழிக்கவேண்டும். தன்னுடைய சிகிச்சை பிடிக்காமல் நரசிம்மன் இல்லையா என்று கேட்கவேண்டும் என்று நினைக்க அவளுக்கு ஆத்திரமாக இருந்தது. அவளு

டைய நினைவுகள் அசோகனை சந்தித்ததையும், கடந்த காலத்தையும் நோக்கிச் சென்றது.

அப்பொழுது அவள் இண்டர்மீடியட் தேர்வு எழுதியிருந்தாள். அந்த ஆண்டு கோடை விடுமுறையில் அவளுடைய தந்தை திடீரென்று இறந்துவிட்டார். இறக்கும் போது அவர் தேவகியை அவள் மாமா கோவிந்தராஜுவிடம் ஒப்படைத்து தன்னிடம் ரொக்கமாக இருந்த பத்தாயிரம் ரூபாய்களையும் அவர் பெயருக்கு மாற்றிவிட்டு அதைக்கொண்டு தன் பெண்ணை டாக்டருக்கு படிக்கவைக்க வேண்டுமென்று கோவிந்தராஜுவிடம் கேட்டுக்கொண்டார்.

சிறுவயதிலேயே தாயை இழந்துவிட்ட தேவகி இப்பொழுது தந்தையும் இறந்துவிட, தன் மாமாவின் வீட்டிலேயே தங்கும்படியாகி விட்டது. அவளுடைய மாமா கோவிந்தராஜு ஒரு முன்கோபக்காரர். அவளுடைய [illegible] [illegible] தேவகியை பிடிக்கவே பிடிக்காது. எப்படியோ அவர்களிடம் தேவகி இருந்து வந்தாள். தேவகிக்கு வைத்தியக் கல்லூரியில் இடம் கிடைத்தது. சம்பளமில்லாமல் படிப்பதற்கும் அவளுக்கு சலுகைகள் கிடைத்தன. அவளும் நன்றாகப் படித்தாள். இரண்டாவது ஆண்டு பொதுத்தேர்வு எழுதி வெற்றி பெற்றாள். மூன்றாவது ஆண்டு துவங்கியது. அப்பொழுதுதான் தேவகி முதல் முதல் அசோகனைச் சந்தித்தாள். அசோகன் அவளுக்கு ஒருவகுப்பு கூட படித்தவன் தேர்வில் வெற்றி பெறாததால் அவளுடைய வகுப்பாகிவிட்டான். தேவகி மிகவும் அடக்கமாக இருப்பவள். அவள் சிறந்த அழகியாக இல்லாவிட்டாலும், மாநிறமாக இருந்தாள். அவள் கண்கள் மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது.

அசோகன் அடிக்கடி தேவகியிடம் பேச வருவான். தேவகி ஒருவார்த்தையில் பதில் சொல்லிவிட்டு பேசாமல் போய்விடுவாள். அந்த ஆண்டு கல்லூரிக்கு அதிகாலையில் வரவேண்டியிருந்தது. வீட்டிலிருந்து வருவதற்கு சிரமமாக இருந்ததால் தேவகியின் மாமா அவளை மருத்துவக் கல்லூரி பெண்கள் விடுதியில் சேர்த்தார். ஒருநாள் பெண்கள் விடுதியில் பெண்களெல்லோரும் மற்றொரு கல்லூரியில் நடந்த தேனீர் விருந்துக்குச் சென்றுவிட்டார்கள். தேவகி மட்டும் போகவில்லை. தன்மாமாவின் அனுமதியின்றி தான் வரமுடியாதென்றுகூறி மறுத்து விட்டாள். அன்றுமாலை ஆறுமணி இருக்கும். அப்போது "தேவகி அம்மா உங்களைத்தேடி ஒருவர் வந்திருக்கிறார்" என்று வேலைக்காரன் வந்து கூறினான். தன் மாமாவாக இருக்குமோ என்று நினைத்து தேவகி அவசரமாகச் சென்று பார்த்தாள். அங்கு அசோகன் நின்றுகொண்டிருந்தான். அவளுக்கு எரிச்சலாக இருந்தது. அவனை சந்திக்க அவள் விரும்பவில்லை என்பது அவள் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

"உங்களுக்கு என்ன வேண்டும்." தேவகி கேட்டாள்.

"உன்னோடு சிறிது பேசவேண்டும் தேவகி, பலநாள் நினைத்து இன்றுதான் வரமுடிந்தது. நின்றுகொண்டேயிருக்கிறாயே இப்படி உட்காரேன்" என்றுகூறி ஒரு பெஞ்சியின்மீது உட்கார்ந்தான்.

தேவகி நின்றுகொண்டே "வந்த காரியத்தைச் சொல்லுங்கள் நான் போகவேண்டும்" என்றாள்.

"நம்முடைய எதிர் காலத்தைப்பற்றி பேச வந்தேன்."

"அப்படி யென்றால்?"

"அதாவது நமது திருமணத்தைப்பற்றி"

தேவகிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. "என்ன, நம்முடையவா. எவ்வளவு துணிவு! என்ன பிதற்றுகிறீர்கள் இங்கிருந்து உடனே போய் விடுங்கள்" என்றாள்.

"என்ன சொல்கிறாய் தேவகி?"

"என் மாமாவுக்குத் தெரிந்தால் என்படிப்பு' வாழ்வு, எல்லாமே பாழாகிவிடும். உடனே போய்விடுங்கள்."

"என்னை உனக்கு பிடிக்கவில்லையா தேவகி?"

தேவகிக்கு ஆத்திரமாக வந்தது. "பண்பும் மரியாதையும் அற்றவர்களை பார்ப்பதற்குக்கூட எனக்குப் பிடிக்காது" என்று கூறிவிட்டு தேவகி விடுவிடென்று சென்று விட்டாள். "அதைத்தான் பார்க்கிறேன்" என்று அசோகன் முனகியது அவள் காதுகளில் விழுந்தது.

விடுதிக்கு வந்ததும் தேவகிக்கு அழுகையாக வந்தது. அசோகனைப்பற்றி அவள் கேள்விப்பட்டதெல்லாம் நினைவுக்கு வரவும் அவளுக்கு பயமாக இருந்தது. மாலதி வந்ததும் அவளிடம் எல்லாவற்றையும் கூறினாள். "அவன் அழகாக இருக்கிறான். ஒரே பையன். பெரிய பணக்காரன். அவனுக்கென்ன குறை,

அப்படி அவமதிக்க. சரி, இல்லை என்று கூறுவது தானே! அதற்கு ஏன் அழவேண்டும்.'' என்று மாலதி கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு சென்றுவிட்டாள். அவளின் செய்கை தேவகிக்கு திகைப்பாக இருந்தது.

அதன்பிறகு இரண்டுநாள் கழித்து அவள் மாமாவிடமிருந்து உடனே வரும்படி தந்தி வந்தது. அன்று மாலையே தேவகி மாமாவின் வீட்டிற்குச் சென்றாள். அவள் மாமா இரண்டு கடிதங்களை அவள் முன் வீசியெறிந்தார். அதைப்படித்ததும் அவள் மண்டையில் யாரோ அடிப்பது போலிருந்தது. அதில் அவள் மிகவும் ஒழுக்கக்கேடானவள் என்று எழுதப்பட்டிருந்தது. ஒருகடிதம் மாலதியின் கையெழுத்து என்பது நன்றாகத் தெரிந்தது. இன்னொன்று அவளுக்குத் தெரியவில்லை. இரண்டுமே மொட்டைக் கடிதங்கள்! அவள் மாமாவிடம் பேசத் துவங்கினாள். அதற்குள் [illegible] அவர் "நீ யாரோ ஒரு [illegible] சேர்ந்துகொண்டு ஊர் சுத்துகிறாயாமே, அசோகன் என்பவனுடன் கூடிக்கொண்டு கூத்தடிப்பதாகச் சொல்கிறார்கள். இந்த இரண்டு கடிதங்களுமே அதற்கு சாட்சி. அது மட்டுமல்ல என்னிடம் இரண்டு மூன்று பேர்கள் வேறு வந்து சொன்னார்கள். இரண்டு நாட்களுக்குள் நான் எவ்வளவு கேட்டாகி விட்டது. உங்கப்பனிடம் அப்பொழுதே சொன்னேன், கேட்டானா. குட்டிச்சுவராக்கி விட்டான் உன்னை. இனி உனக்கும், எனக்கும், ஒரு சம்பந்தமுமில்லை. நீ இங்கு இனி வராதே-வராதே. இதோ கிடக்கிறது உங்கப்பன் பணம் எடுத்துக்கொண்டுபோ'' என்று கோபத்தின் உச்சியில் கத்திக்கொண்டு ஒரு கையெழுத்திட்ட செக்கை தூக்கி எறிந்தார். தேவகி எவ்வளவு சொல்லியும் அவர் நம்பவில்லை. அவளுடைய மாமி யார்வீட்டிலோ நடக்கும் சண்டையை வேடிக்கை பார்ப்பது போல் அலட்சியமாக நின்றுகொண்டிருந்தாள். "கெட்டுப்போனவளை வீட்டில் வைத்துக்கொண்டிருக்கிறான் என்ற பெயரைவிட அவளை விரட்டிவிட்டான் என்ற பழி எனக்குப் பரவாயில்லை'' என்று கோவிந்தராஜு முடிவாகக் கூறிவிட்டார். தேவகி மனவருத்தத்தோடு பெண்கள் விடுதிக்கு வந்தாள்.

தேவகிக்கு அப்போது ஒன்றுமே புரியவில்லை. இறந்து விடலாம் என்று தோன்றியது. தான் தற்கொலை செய்துகொண்டாலும் தன்மீதுள்ள பழி நீங்காது. அதனால் வாழ்ந்து காட்டியே அதைப் போக்கவேண்டும், அவள் தோழி கமலாவும் அதையே கூறி, அவளுக்கு ஆறுதலைச் சொன்னாள்.

தேவகிக்கு, அவளுடைய தந்தையின் நண்பர் சாம்பசிவத்தின் நினைவு வந்தது. அவர் மிகவும் நல்லவர். அவரிடம் சென்று எல்லாவற்றையும்கூறி செக்கையும் கொடுத்து தனக்கு கார்டியனாக இருந்து உதவும்படிக் கேட்டாள். தன்வீட்டிலேயே தங்கும்படி அவர் எவ்வளவோ கூறினார். அதற்கு தேவகி மறுத்து விட்டாள். பிறகு அவள் விருப்பப்படியே சாம்பசிவம் ஏற்பாடு செய்தார்,

இதற்குப்பிறகு தேவகி மிகவும் மாறிவிட்டாள். அவள் தன்னை அலங்காரம் செய்து கொள்வது கிடையாது. தன் படிப்பிலேயே மூழ்கிக் கிடந்தாள். தன் எதிர்காலத்திலும் தான் திருமணமே, செய்து கொள்ளாமல் கன்னியாகவே இருந்து, நோயாளிகளைக் காப்பாற்றுவதே தன் இலட்சியமாகக்கொள்ள முடிவு செய்துகொண்டாள். தன்னை இந்த நிலைக்கு [illegible] ஆளாக்கியது அசோகனின் வேலைதான் என்பது தேவகிக்கு நன்றாகத்தெரியும். அவனை எப்படியாவது பழி வாங்கவேண்டுமென்று அவள் மனம் கொதித்தது. அது தன்னால் முடியாத காரியமென்று பேசாமல், இருந்து விட்டாள்.

இந்த சம்பவத்திற்கு பிறகு தேவகி பல முறை அசோகனை மாலதியுடனும், மற்ற பெண்களுடனும், சுற்றிக்கொண்டிருப்பதை பார்த்திருக்கிறாள். தேவகி ஒரு ஆண்டுகூட தவறாது வெற்றி பெற்று, வைத்தியப் படிப்பை முடித்து விட்டாள். அசோகன் அதே வகுப்பிலிருந்தான். தேவகிக்கு சாம்பசிவத்தின் உதவியால் டாக்டர் நரசுவின் நர்சிங்ஹோமில் வேலை கிடைத்தது. டாக்டர் நரசிம்மன் சாம்பசிவத்தின் நெருங்கிய நண்பர். அவருக்கு வயது ஐம்பது இருக்கும். அவர் கல்யாணமே செய்து கொள்ளவில்லை. தன் வாழ்நாளையெல்லாம் நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வதிலேயே கழித்துக்கொண்டிருந்தார். இருதய சம்பந்தமான நோய்களை நீக்குவதில் மிகவும் கெட்டிக்காரர். பட்டணத்தில் அவரைத் தெரியாதவர்களே இல்லை. சிறந்த பண்பாடுடையவர். ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவம் செய்தார். டாக்டர் தேவகி அங்கு வந்தது அவருக்கு மிகவும் உதவியாக இருந்தது. அவரது வலது கைபோல் அவள் விளங்கினாள். தேவகி அங்கு வந்ததும் உலகத்தையும் தன்னையும் மறந்து உழைத்தாள். அவளுக்கு வாழ்க்கை அங்கு அமைதியாக இருந்தது. அந்த நர்சிங்

ஹோமின் காம்பவுண்டினுள்ளேயே இருந்த ஒரு சிறு வீட்டில் தேவகி தங்கியிருந்தாள். அவளுடன் தாரா என்ற அனுதையான விதவை நர்சும் தங்கியிருந்தாள். இருவரும் ஒரு ஆளை வைத்து சமைத்துச் சாப்பிட்டார்கள். நர்சிங்ஹோம் மாடியில் தேவகிக்கு ஒரு அறையிருந்தது. அவள் எப்பொழுதும் அங்குதான் இருப்பாள். டாக்டர் நரசு அவளைத் தன் மகள்போலவே மிகவும் அன்பாக நடத்தி வந்தார். டாக்டர் நரசு ஊரில் இல்லாதபோது, அவள்தான் எல்லா நோயாளிகளையும் கவனித்துக்கொள்வாள். அவள் நரசு நர்சிங்ஹோம் வந்து இரண்டாண்டுகள் உருண்டு ஓடிவிட்டது. ஆறு மாதங்களுக்கு முன்பு தேவகிக்கு அவள் தோழி கமலாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அசோகன் மாலதியை வஞ்சித்துவிட்டதாகவும், அவன் ஒரு காமுகன் என்றும் பலபெண்களைக் கெடுத்தவன் என்றும், அவன் இப்பொழுது மதுரையில் இருப்பதாகவும், அவன் தன் படிப்பை முடிக்கவேயில்லை என்றும் குறிப்பிட்டிருந்தாள். அதற்கு பிறகு அவள் அசோகனைப்பற்றி எதுவும் கேள்விப்படவில்லை, அதை அவள் விரும்பவில்லை. இன்று திடீரென்று அவனைச் சந்தித்ததும் அவளுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அவன் தன்னை தெரியாதது போல் நடித்து வஞ்சிக்கப் பார்க்கிறான் என்று எண்ணினாள்.

கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. தேவகி எழுந்து வந்தாள். தாரா அங்கு நின்றுகொண்டிருந்தாள். "மணி பத்தாகி விட்டது டாக்டர்" தாரா கூறினாள். தேவகி நோயாளிகளை கவனிக்கச் சென்றாள். எல்லோரையும் பார்த்துவிட்டு கடைசியாக சித்தார்த்தனின் அறைக்கு வந்தாள். அவன் தூங்கிக்கொண்டிருந்தான். அவனை உற்றுப் பார்த்தாள். அவன் அன்றிலிருந்து இன்றுவரை அப்படியே இருந்தான். அந்த கவர்ச்சியான முகத்தில் சிறிதுகூட மாற்றமில்லை. அவனுக்கு ஊசி போட்டுவிட்டு தேவகி அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

அன்று இரவு முழுவதும் தேவகி தூங்கவே இல்லை. பலவாறு எண்ணமிட்டாள். "இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது அசோகனைப் பழி வாங்கவேண்டும். இவனை இந்த உலகத்திலேயே நடமாடவிடக்கூடாது. எனக்கு அநியாயமாக பழி சுமத்தினவன், பலபெண்களைக் கெடுத்தவன், விட்டுவிட்டால் எத்தனை பேரைக் கெடுப்பானோ! உலகத்தில் எத்தனை பேருடைய உயிரை நான் காப்பாற்றுகிறேன். பலருக்கு கேடுபயக்கும் இவனை அழிப்பதால் பாபமில்லை. ஆனால் அதற்கேற்ற துணிவு எண்ணிடமிருக்குமா?" என்றெல்லாம் நினைத்தாள். அவனை சித்தார்த்தன் தெரியாததுபோல் நடித்தது அவளுடைய பழிவாங்கும் எண்ணத்திற்கு தூபமிட்டது.

இரவு இரண்டு மணிக்கு ஒருமுறை தேவகி கீழே இறங்கி வந்தாள். சித்தார்த்தன் முனகிக் கொண்டிருந்தான். "மாலதி! மாலதி! கரைக்ட் மாலதி! நீ செய்ததுதான் கரைக்ட்" என்று அவன் பிதற்றினான். இதைக் கேட்டதும் தேவகி பற்களை நறநறவென்று கடித்தாள். மேலே தன் படுக்கையில் வந்து தொப்பென்று விழுந்தாள். அவள் மனம் கொதித்தது. நீண்டநேர சிந்தனைக்குப்பிறகு ஏதோ ஒருமுடிவுக்கு வந்தவள்போல் படுத்து உறங்கிவிட்டாள்.

மறுநாள் காலை தேவகி தாராவைக் கூப்பிட்டு "சித்தார்த்தன் என்ற நோயாளி எங்கே இருக்கிறன், என்ன வேலை செய்கிறன், அவனுடைய மனிதர்கள் யார், ஏதாவது செய்தி என்றால் யாருக்குத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுவா" என்றாள். தாரா சென்று சற்று நேரம் கழித்து வந்தாள். சித்தார்த்தன் எஞ்சினியர் வேலை பார்ப்பதாகவும், அவன் ஒரு ஓட்டலில் தங்கியிருப்பதாகவும், ஏதாவது செய்தி என்றால் மங்களம் என்ற பெயரையும் மதுரையில் ஒரு விலாசத்தையும் கொடுத்து அதற்கு அறிவிக்கும்படி கூறியதாகவும், அதற்கு மேல் எதுவும் கூற அவன் மறுத்து விட்டதாகவும் தாரா தெரிவித்தாள். இதைக் கேட்டதும் தேவகிக்கு கோபமாக வந்தது. "எஞ்சினியர். எவ்வளவு பொய், இப்பொழுது மதுரையில் மங்களம் என்பவள் ஆசைநாயகி போலிருக்கிறது. சென்னையில் கேம்ப் யாரை பிடிக்கவோ, அதற்குள் நெஞ்சு வலி வந்துவிட்டது. இத்தனை பாவங்கள் செய்தால் நெஞ்சு வலிக்காமல் என்ன செய்யும்" தேவகி தனக்குத்தானே கூறிக்கொண்டாள். அன்று முழுவதும் அவனைப்பற்றிய சிந்தனையிலேயே மூழ்கியிருந்தாள்.

அன்று சித்தார்த்தனுக்கு சுரம் அதிகரித்திருந்தது. டெம்பரேச்சர் ஏறியிருந்தது. மாலை ஆறுமணிக்கு தேவகி நோயாளிகளை ஒவ்வொருவராக கவனித்துக்கொண்டு வந்தாள். சித்தார்த்தனின் அறையை கடக்கும் பொழுது அவன் "டாக்டர்" என்று கூப்பிட்டான். அவள்என்ன என்பதுபோல் வாயிலில் நின்றாள். "தயவுசெய்து கொஞ்சம் பழரசம் தரமுடியுமா. எனக்குத் தாகமாக இருக்கிறது" என்று ஆங்கிலத்தில் கேட்டான். தேவகி பக்கத்தில்

நின்ற ஒரு நர்சுக்கு சாடை செய்துகொண்டு வரச்சொன்னாள். தேவகி சித்தார்த்தனின் அருகில் வந்தாள். "டாக்டர் நான் உங்களை என்னவெனறோ நினைத்தேன். டாக்டர் ஈரசு பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. எனக்கு நெஞ்சுவலி இப்பொழுது பரவா யில்லை. ஆனால் சுரம்தான் அதிகமாகிவிட் டது" என்றான்.

தேவகி தன் உதட்டைக் கடித்துக்கொண் டாள். "இவன் தன் வேலையை புதுமுறையில் ஆரம்பித்திருக்கிறான். என்னை வேண்டு மென்றே புகழ்கிறான்" என்று நினைத்தாள். "மகிழ்ச்சி, சுரமும் நாளையோடு நின்றுவிடு மென்று நினைக்கிறேன்" என்றுகூறி புன் னகை புரிந்தாள்.

அவன் "மிக்க நன்றி டாக்டர்" என்றுகூறி விட்டு, "ஆனால் ஒன்று டாக்டர்" என்றான். அதற்குள் பழரசம் வரவே நிறுத்திவிட் டான். அவர்களுடைய ஆங்கில உரையாட லும் அதோடு நின்றது.

தேவகி தனது அறையில் ஜன்னலருகே நின்றுகொண்டிருந்தாள். அப்பொழுது நன் றாக இருட்டிவிட்டது. சற்று முன் சித்தார்த் தன் அதாவது அசோகன் பேசியவை அவள் மனதில் சுழன்றுகொண்டே இருந்தது. "அசோகன் எவ்வளவு அன்பொழுகப் பேசு கிறான். நோயுடன் இருக்கும் பொழுதுகூட அவன் முகம் எவ்வளவு களையுடன் பிரகாசிக் கிறது." இதை நினைத்தவுடன் அவள் இது வரை உணர்ந்தே இராத இன்பஉணர்ச்சி உட லெங்கும் ஊடுருவியது "அவன் கல்லூரி யில் படிக்கும் பொழுது ஒழுங்கானவனாக இருந்து படிப்பு முடிந்ததும் தன் மாமாவைக் கேட்டு தன்னை திருமணம் செய்துகொண் டிருந்தால் இப்பொழுது எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஆமாம் அவன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது கடைசியாக "ஆனால் ஒன்று டாக்டர்" என்று சொன் னானே அது என்னவாக இருக்கும். அவனு டன் நான் இன்னும் சிறிதுநேரம் பேசி இருக்க லாம். ஒருவேளை அவன் என்னை............" என்று எண்ணினாள். உன்னுடைய வைராக் கியம் இவ்வளவுதானா அவள் மனதில் இந்த எண்ணம் எழுந்தது. நெடுநாள் பதுங் கியிருந்த பழிவாங்கும் உணர்ச்சி விழித்துக் கொண்டது. "சீச்சீ நானும் மற்றப் பெண் களைப்போல் வெளி அழகில் மயங்கி இரக்கப் பட்டு காரியத்தைக் கெடுத்துவிடக் கூடாது. எப்படியும் முடித்தே தீரவேண்டும்" தனக் குத்தானே கூறிக்கொண்டாள். அவள் இத யத்தில் முதல் முதல் பூத்த காதல் அரும்பை கசக்கி எறிந்தாள். தேவகிக்கு வேதனையாக யிருந்தது. கீழே வந்து நர்சிங்ஹோமின் முன்புறமிருந்த பெரிய வேப்ப மரத்தினடியில் உலாவிக்கொண்டிருந்தாள். அப்பொழுது தாரா வந்து "டாக்டர் ஈரசுவிடமிருந்து 'டிரங் கால்' வந்திருக்கிறது, அவர் வர இன்னும் இரண்டு நாட்களாகுமாம்" என்று அவர் அதில் தெரிவித்திருப்பதாகக் கூறிச்சென் றாள். அந்தச் செய்தி தேவகிக்கு, அவளு டைய எண்ணத்திற்கு துணைபுரிவது போலி ருந்தது.

மறுநாள் காலை சித்தார்த்தனுக்கு சுரம் அதிகமாகிவிட்டது. அவனுக்கு ஐஸ் வைத்து கட்டிவிட்டு இரண்டு நர்சுகள் அவனை கவ னித்துக் கொண்டிருந்தார்கள். தேவகி வந்து சித்தார்த்தனை பார்த்தாள். அவள் மனதில் ஒருஎண்ணம் பளிச்சிட்டது. பின் தாராவை அழைத்து "சித்தார்த்தன் தெரிவித்த விலா சத்திற்கு அவன் அபாயகரமான நிலையிலிருப் பதாகவும் உடனே வரும்படியும் தந்திகொடு" என்று மெதுவாக அவள் காதில் மட்டும் விழும்படி சொன்னாள். தாரா தந்திக்கு ஒரு ஆளை அனுப்பிவிட்டு "டாக்டர், அவர் உடல் ஒன்றும் அவ்வளவு மோசமாக இல்லையே ஏன் அப்படிச் சொன்னீர்கள்" என்று கேட்டாள். "அவருடைய மனிதர்கள் என்று யாரும் இல் லையே, தெரிவிக்க வேண்டாமா, அதனால் தான் வேறு ஒன்றுமில்லை" என்று கூறி விட்டுப் போய்விட்டாள்.

தேவகியின் மனம் தத்தளித்தது. தான் நினைத்திருக்கும் செயலை செய்து முடிக்கும் வரை தனக்கு பைத்தியம் பிடிக்காமலிருக்க வேண்டுமே என்று நினைத்தாள். பலமுறை வேண்டாமென்று நினைத்து கடைசியில் செய் தேயாகவேண்டும் என்ற உறுதியுடன் இரவு பத்துமணிக்கு படுத்தாள்.

இரவு ஒரு மணிக்கு விழித்துக்கொண்டாள். பீரோவைத் திறந்து ஒரு மருந்து புட்டியை யும் ஊசியையும் எடுத்து வைத்துவிட்டு வராந் தாவில் வந்து உலாவினாள். நர்சிங்ஹோம் நிசப்தமாக இருந்தது. நோயாளிகள் முனகும் சப்தமும், இருமும் சப்தமும் மின்சாரவிசிறிகள் சுழலும் சப்தமும் மாறி மாறி இலேசாகக் கேட் டது. தெரு மூலையில் ஒரு நாய் குரைக்கும் சப்தம் கேட்டது. அது அவளுக்கு பயங்கர மாக ஒலித்தது. தன் மனதை திடப்படுத்திக் கொண்டு, தேவகி கீழே இறங்கி வந்தாள். இரவு வேலை செய்யும் இரண்டு நர்சுகள்மட்டும் விழித்துக்கொண்டிருந்தார்கள். சித்தார்த்த

னின் அறைக்கு தேவகி வந்தாள். அவன் நன்ருக உறங்கிக்கொண்டிருந்தான். ஸ்டெதத்தை அவன் மார்பின்மீது வைத்துப்பார்த்துவிட்டு தேவகி மேலேபோய் தான் தயாராக எடுத்து வைத்திருந்த மருந்தை ஊசியில் எடுத்துக் கொண்டு, மறுபடியும் அவன் அறைக்கு வந்தாள். அவள் கரங்கள் நடுங்கின. சித்தார்த்தனின் முகத்தை ஒருமுறை உற்றுநோக்கிளுள். அமைதியாக இருந்தது. நோயின் வேதனையும் முகத்தில் படிந்திருந்தது. தேவகி ஒருகணம் தயங்கினுள். பிறகு தன்னிடமிருந்த தைரியம் முழுவதையும் சேர்த்து, ஊசியை அவன் கையில் ஏற்றினுள். அவன் விழித்துக் கொண்டான். "என்ன டாக்டர் எத்தனை ஊசி போடுவீர்கள் வலிக்கிறது" என்று குழந்தையைப்போல் கூறினுன். "இனிமேல் போடவில்லை, வலிக்கவும் வலிக்காது, நீங்கள் தூங்குங்கள் சரியாகிவிடும்." என்று கூறிவிட்டு தேவகி மடமடவென்று மேலே போய் விட்டாள்.

அன்று இரவு அவள் தூங்கவேஇல்லை. சித்தப்பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். காலை ஆறுமணிக்கு தாரா பதற்றத்துடன் ஓடிவந்து "டாக்டர், சித்தார்த்தன் என்ற நோயாளி இறந்து விட்டார்" என்ருள். தேவகியும் திடுக்கிட்டவள்போல் கீழே போய் அவனைப் பார்த்தாள். அவன் மீளாத உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான். நோயின் வேதனையும் அகன்று, முகம் மிகஅமைதியாக இருந்தது. அதைப்பார்த்ததும் தேவகிக்கு அழுகையாக வந்தது. அவள் தன் அறையில் சென்று அழுதுகோண்டே இருந்தாள்.

பகல் பதினெரு மணிக்கு திடீரென்று கீழே கூக்குரல் கேட்டது. தேவகி வந்தாள். வயதான அம்மாள் ஒருத்தி "அய்யோ சித்தார்த்தா! போய்விட்டாயா" என்று அழுது கொண்டிருந்தாள். அவளுக்குப்பக்கத்தில் ஒரு இளம் பெண்ணும், ஒரு இளைஞனும் கண்ணீர் நிறைந்த கண்களுடன் நின்று கொண்டிருந்தார்கள். இளைஞனைப் பார்த்ததும் தேவகி திடுக்கிட்டு "அசோகன்" என்று வாய்விட்டுக் கத்தினுள். அந்த இளைஞன் நிமிர்ந்து "ஆ! தேவகி, நீயா?" என்ருன்.

,, அப்படியென்ருல்......... இறந்தது......'

"என் தம்பி, தேவகி."

தேவகியின் நெஞ்சில் ஓங்கி சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது. தண்ணீரில் தத்தளிப்பதுபோலிருந்தது. கீழே விழாதபடி அருகில் இருந்த ஜன்னல் கம்பிகளைப்பிடித்துக் கொண்டாள். அசோகனுடன் இருந்த அம்மாள். "அய்யோ! அசோகா, பாரடா உன் சகோதரனை, சித்தார்த்தனை பாரடா. ஒரே நாளில் உன்னையும் அவனையும் பெற்றெடுத்தேன், பாவி நான் போகக்கூடாதா, அய்யோ! மாலதி உன் அண்ணன் நம்மை விட்டுப் போய்விட்டானம்மா. நான் என்ன செய்வேன். தெய்வமே அடையாளம் கண்டு பிடிக்க முடியாதிருந்த இந்த இரட்டையர்களைக் காணப் பொருக்கவில்லையா? பிரித்துவிட்டாயே என்று சித்தார்த்தனின் மீது சாய்ந்துகொண்டு அழுதாள்.

"அப்படியானுல் என்தோழி மாலதி ஒரே பிள்ளை என்று சொன்னது? அசோகன் அவளிடம் பொய்சொல்லியிருப்பான்" தேவகியால் அதற்குமேல் எதுவுமே நினைக்கமுடியவில்லை தலை சுழன்றது அவள் அங்கேயே விழுந்து விட்டாள்.

தேவகி மூர்ச்சை தெளிந்து கண்விழித்த போது மாலை மணி ஏழு ஆகிவிட்டது. தாரா அவளருகில் அமர்ந்திருந்தாள். தேவகி மயக்கமடைந்த பிறகு நடந்த நிகழ்ச்சிகளையும், சித்தார்த்தனைப்பற்றி தான் தெரிந்துகொண்டவைகளையும் தாரா கூறத் தொடங்கினுள்.

சித்தார்த்தனின் தந்தை இறந்து பத்து ஆண்டுகளாகிவிட்டது. அவனுடைய தாய் மங்களம்மாளுக்கு, சித்தார்த்தனும் அசோகனும் இரட்டைக்குழந்தைகளாகப் பிறந்தவர்கள். அசோகனை டாக்டருக்கும், சித்தார்த்தனை எஞ்சினியருக்கும் படிக்கவைத்தார்கள். சித்தார்தன் எஞ்சினியர் வேலை செய்துகொண்டிருந்தான். அசோகன் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டான். அவன் தற்பொழுது மதுரையில் தங்கியிருக்கிருன். அவனுக்கு கை, கால்களில் குஷ்டநோய் உண்டாகிவிட்டது, அதனுல் அவனை வேலூர் மருத்துவவிடுதிக்கு அழைத்துச் செல்வதற்காக பத்து தினங்களுக்குமுன் அவன் தாயாரும், தங்கை மாலதியும் மதுரை சென்ருர்கள்.

இந்தவிவரங்களை தாரா சொல்லிக் கேட்டவுடன் தேவகிக்கு மனதை வேல் கொண்டு குத்துவது போலிருந்தது. அநியாயமாக தான் சித்தார்த்தனை கொன்றுவிட்டதாக எண்ணினுள். "அசோகன் செய்த தவறுக்கு காலம் பதிலளித்துவிட்டது. ஆனுல் நான் செய்த தவறுக்கு........"

தேவகி சித்தார்த்தன் இருந்த அறைக்கு வந்து அவன் படுத்திருந்த படுக்கையில் உட்கார்ந்தாள் இதயத்தை சுமக்கமுடியாத பாரம்

அழுத்தியது. தலையணையைத் தூக்கி கட்டிலின் நடுவில் வைத்து, உட்கார்ந்தபடியே அதில் சாய்ந்துகொள்வதற்காக, அதை எடுத்தாள். அதன் அடியில் ஒரு துண்டு காகிதம் இருந்தது. என்னவோ குப்பைக்காகிதம் என்று நினைத்து, அதைத்தூக்கி கீழே போட்டாள். கால்களைகீழே தொங்கவிட்டு தலையணையில் சாய்ந்துகொண்டு படுத்திருந்தாள். அவள் தூக்கி எறிந்த காகிதம் அவள்கண்ணில் பட்டது அதன் ஓரத்தில் தேவகி என்ற எழுத்து தெரிந்தது. சட்டென்று எழுந்து அதை எடுத்தாள் "தேவகி! நான் உன்னைக் காதலிக்கிறேன். வானத்து நட்சத்திரமலரை எடுத்து சித்தார்த்தன் கையில் வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறான். அது என்றாவது நிறைவேறுமா?" என்று எழுதியிருந்தது.

தேவகி ஜன்னல் வழியாக ஆகாயத்தை வெறித்து நோக்கினாள். "நான் ஒன்றும் நட்சத்திரமலர் அல்ல மலர்களிலும் மணமில்லாத மலர். வெறும்காகிதமலர், விஷமலர்" என்று அவள் வாய்விட்டுக் கூறினாள், அவள் கண்கள் நீரைச்சொரிந்தன. அவள் எவ்வளவுநேரம் அப்படி நின்றாளோ தெரியவில்லை. தாரா வந்து "டாக்டர் மணிபத்தாகி விட்டது, உங்களை எங்கெல்லாமோ தேடிக்கொண்டு வருகிறேன் ஏன் எப்படியோ இருக்கிறீர்கள்" என்று கேட்டாள் "ஒன்றுமில்லை தாரா, டாக்டர் நரசு இல்லாத வேளையில் அநியாயமாக ஒரு நோயாளி இறந்து விட்டார். அதனால் என்மனம் சரியில்லை. இன்று நீயே எல்லா நோயாளிகளையும் பார்த்து ஊசி போடவேண்டியவர்களுக்கு போட்டுவிடு. நான் தூங்கப் போகிறேன் காலை ஏழுமணிவரை என்னை எழுப்பாதே" என்று கூறிவிட்டு தள்ளாடிக் கொண்டே தன் அறைக்குச் சென்றாள்.

தேவகி அறைக்கு வந்ததும் முதல் நாள் சித்தார்த்தனுக்கு கொடுத்த அதே மருந்தையும் ஊசியையும் எடுத்து மேஜைமீது வைத்துவிட்டு, ஒரு காகிதத்தை எடுத்து அதில் ஏதோ எழுதி மேஜைமீது வைத்தாள். பிறகு ஒருமணிக்கு கடிகாரத்தில் அலாரம் வைத்துவிட்டு, படுக்கையில் வத்துஉட்கார்ந்தாள். அவளுக்கு தூக்கமே வரவில்லை. அழுது அழுது கண்ணீர் வரண்டுவிட்டது. எந்தவித உணர்வும் இன்றி அமைதியாக உட்கார்ந்திருந்தாள். அலாரம் அடித்தது அப்பொழுதும் அவள் விழித்துக்கொண்டிருந்தாள். அலாரத்தை நிறுத்திவிட்டு தயாராக வைத்திருந்த மருந்தை ஊசியில் ஏற்றி முதல்நாள் சித்தார்த்தனுக்கு போட்ட அதேமருந்தை, அதேநேரத்தில், தன்னுடைய கையில் போட்டுக்கொண்டு படுக்கையில் படுத்தாள். சித்தார்த்தன் சென்ற இடத்திற்கு அல்ல, அவனை அனுப்பிய இடத்திற்கு, அவளும் தன் பயணத்தைத் தொடங்கிவிட்டாள்.

மறுநாள் காலை ஆறுமணிக்கு டாக்டர் நரசு வந்தார். இன்னும் தேவகி எழுந்திருக்காதது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது. தேவகி அறையின் வாயிலில் நின்று அழைத்தார். பதில் வராது போகவே, கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றார். தேவகி படுத்திருந்தாள். உடம்புக்கு என்னமோ, ஏதோவென்று போர்வையை நீக்கிவிட்டு நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். உடல் சில்லிட்டிருந்தது. உற்றுக்கவனித்தார். அவள் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். எதற்குமே கலங்காத நரசிம்மனின் எஃகு உள்ளத்தையே இந்தக் காட்சி உலுக்கிவிட்டது. மேஜையைப் பார்த்தார், ஊசிடப்பாவும், திறந்திருந்த மருந்துப்புட்டி ஒன்றும், ஒரு கடிதமும் இருந்தன. அதில் அவர் விலாசமிடப்பட்டிருந்தது. உடைத்துப் படித்தார்.

மதிப்பிற்குறிய டாக்டர் அவர்களுக்கு,

வணக்கம். எனது அறியாமையினால் அநியாயமாக ஒரு நோயாளியைக் கொன்றுவிட்டேன். அந்தத்தவறை சுமந்துகொண்டு என்னால் உயிர்வாழ முடியாது. நான் செய்த தவறுக்காக விஷஊசியை ஏற்றுக்கொண்டேன். சாவின் மடியிலே மகிழ்ச்சியோடு செல்கிறேன். இதுநாள்வரை தந்தைபோல் காப்பாற்றிய உங்களுக்கு எனது நன்றி. என்னால் உங்களுக்கு ஒரு பயனுமில்லை வருகிறேன்.

உங்களன்புள்ள மகள்,
தேவகி.

கடிதத்தை படித்து முடித்ததும் இதுவரை கண்ணீரே சிந்தாத டாக்டர் நரசுவின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. மாசற்ற இரண்டு மாணிக்கங்களின் பிரிவால் விடப்பட்ட இரண்டு துளிக்கண்ணீரில் உலகத்தின் துக்கம் முழுவதும் அடங்கியிருந்ததுபோல் இருந்தது.

(41)

ஒருசமயம் பிரமதேவன் இந்திரசபைக்குப் போயிருந்தார் இந்திரசபை என்றால் வேடிக்கைகளுக்கு, ஆட்டபாட்டங்களுக்குப் பெயர் பெற்ற இடமல்லவா? தேவமாதர்கள் ஆடினார்கள், பாடினார்கள்...அரம்பை, திலோத்தமை, மேனகை, ஊர்வசி இவர்கள் இந்திரசபையை ஆட்டிவைத்தனர். மூவுலகைப் படைத்து, உயிர்களையெல்லாம் உண்டாக்கிய முதல்வர் பிரமதேவருக்கு ஊர்வசியின்மீது கண்விழுந்துவிட்டது. அதிலும் அன்று, பிரமதேவரை மகிழ்விக்க ஊர்வசியின் நடனம் அபாரமாக இருந்தது. பிரமதேவரின் உள்ளத்தில் காமம் களிநடம் புரிந்தது. நடனமாடும் அந்த தேவமாதை, அப்பொழுதே அடையவேண்டும் என்று துடித்தார், மூவுலகையும் ஆட்டிவைக்கும் கடவுளை, காமம் ஆட்டிவைத்தது.

ஊர்வசி பிரமதேவருக்குத் தங்கைமுறை வேண்டும். எப்படியெனில் ஊர்வசி திருமாலிடம் பிறந்தவளாகும். திருமால், நரநாராயண் உருவில் கடுமையான தவம் செய்துகொண்டிருந்தார். அவருடைய அகோரத் தவம்கண்டு உலகமெல்லாம் பயந்ததாம். எங்கே தன்னுடைய பதவிக்கு ஆபத்துவந்துவிடுமோவென்று தேவேந்திரன் நடுங்கினான். நரநாராயணரின் தவத்தை அழிக்கவேண்டுமென்று இந்திரன் திட்டமிட்டான். தவத்தை அழிக்க, இந்திரன் திட்டம் தீட்டும்பொழுது ஆலோசனை தருபவர்கள் தேவகுருவும், சப்த இருடிகளுமா? இல்லை, தேவமாதர்கள்,—தேவலோகத்து கன்னிகையர்கள். இந்திரனுக்கு முக்கியமான நண்பர்கள்—அதிலும் எதிரிகளின் தவங்களைக்கெடுக்க உதவியாக இருப்பவர்கள் தேவலோகத்து மாதர் படைதான். தேவர்படை தோற்றோடி ஒளிந்தபொழுதெல்லாம், இந்த மாதர்படை தைரியத்துடன் முன்னேறி, பகைவர்களை மஞ்சத்தில் வீழ்த்தி, காமப்போரில் வென்று, கடைசியாக தேவலோகத்து வரவிருந்த ஆபத்தை நீக்கியவர்கள். அகோரத்தவம் செய்யும், முனிபுங்கவர்கள், அமர்க்களத்தில் வீராவேசம் காட்டும் அசகாயசூரர்கள் எவர்களாயினும் இந்த மாதர்படையின்முன் தோற்றோடுவார்கள். அந்த அழகிகளின் பட்டாளத்தின் திறமையை நம்பித்தான் இந்திரன் ஆண்டுவந்தான். இந்திரபதவிக்கு வரவிருந்த ஆபத்து பலதடவை தேவமாதர்களின் "வலிமையால்" தடுக்கப்பட்டது, இந்திரன் பாதுகாக்கப்பட்டான். நரநாராயணர் அகோரத்தவம் செய்கிறார் என்று கேள்விப்பட்டதும், இந்திரன் தனது தேவமாதர்களை அனுப்பினான். நரநாராயணரிடம் தேவமாதர்கள் வந்து தங்கள் ஆடல்பாடல்களைக் காட்டினார்கள், மதனப்போருக்கு கூவியழைத்தனர். நரநாராயணர் மும்மூர்த்திகளில் ஒருவரான திருமாலின் அம்சமல்லவா? வந்திருப்பவர்கள் யாரென்பதை உடனே ஞானக்கண்மூலம் அவர் கண்டுகொண்டார். பெண்களென்றால் மும்மூர்த்திகள் மயங்கிவிடுவது வழக்கம். இந்தத்தடவை திருமால் மயங்காமல், தவக்கோலத்தில் இருந்தார். தங்களைவிட அதிரூப அழகிகள் யாருமில்லை என்ற எண்ணத்துடன்வந்த தேவமாதர்கள், நரநாராணரை மயக்க தம் அழகைக்காட்டி, அவரைச்சூழ்ந்து ஆடினார்கள். அவர்களைக்கண்ட நரநாராயணர் சிரித்து, தமது தொடையைத்தட்டினராம்! அதிலிருந்து ஒருபெண் பிறந்தாளாம்!

பைங்கொடியாய், பத்தரைமாற்றுத் தங்கநிறமாய், தேவமாதரைத் தோற்கடிக்கும் அங்க அழகுகளுடன், அந்தப்பெண் இருந்தாள். உடல் அழகில் தங்களைவிடச்சிறந்த பெண் கிடையாது என்று இறுமாப்புடன் இருந்த தேவமாதர்கள், ஊர்வசியின் அழகைக்கண்டு வெட்கித் தலைகுனிந்தார்களாம். தேவமாதர்களின் அழகு ஆண்களை மயக்குவதாயிருந்தது, விட்டுணுவின் தொடையில் பிறந்த ஊர்வசியின் அழகு அந்த தெய்வமாதர்களையே மயக்குவதாயிருந்தது. நரநாராயணரை மயக்கவந்த தேவமாதர்கள் தாங்கள் வந்த வேலையை மறந்து, ஊர்வசியின் ஆட்டத்தில், பாட்டத்தில், மயங்கி, அவள்பின்னால் சென்றார்கள். ஊர்வசி அவர்களை அழைத்துக்கொண்டு இந்திரலோகத்துக்குச் சென்றாள். தேவர்கள் தோற்றுவந்தாலும், இந்திரனுக்கு ஒருவகையில் வெற்றிகிடைத்தது. அவனுடைய மாதர்படையில் புதிய அழகி ஒருத்தி சேர்ந்துவிட்டாள்!

பிரமா திருமாலின் மகனாகக்கருதப்படுவர். எனவே ஊர்வசி பிரமாவுக்குத் தங்கைமுறையாகவேண்டும். காமநினைவு வந்ததும், கடவுளர்களான மும்மூர்த்திகளுக்கு அண்ணன்—தங்கை, தந்தை-மகள் என்ற பேதாபேதங்கள் உண்டாவதில்லை. ஊர்வசி நடனமாடிக் கொண்டிருந்தாள், அவையிலிருந்த மற்றவர்கள் இசை, தாளம், நடனம் இப்படி பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிரமதேவரின் கண்களின்முன், ஆடுகின்ற ஊர்வசியின் உருவம் ஒன்றுதான் தெரிந்தது. பிரமதேவர் கற்பனையில் வல்லவராயிற்றே! தமது மனதில் காம நினைவுகளைச் சித்தரித்தபடி இருந்தார். காம வேதனை அதிகமாக, அதைத்தீர்த்துக்கொள்ளும் முயற்சியில் பக்கத்தில் இருந்த சிறு குடத்தை எடுத்து அணைத்துக்கொண்டாராம் அதைப்பெண்ணாக பாவித்து! அணைத்துக்கொண்டவர் கடவுளானதால், குடத்திற்குள் குழந்தை கூவியது. அற்புதமாக—கடவுளுக்கும் குடத்துக்கும் பிறந்த குழந்தைதான் அகத்திய முனிவர். குடமுனி என்று வழங்கப்படுவர், அதாவது குடத்தில் பிறந்தவர்!

மும்மூர்த்திகளாயிருந்தபோதிலும், அவர்களும் மற்றவர்களைப்போல அடிக்கடி தவஞ்செய்யப்போய்விடுவார்கள். மற்ற முனிவர்கள் தவஞ்செய்து, மும்மூர்த்திகளில் ஒருவரைக்கண்டு, தவப்பேறு அடைவார்கள். மும்மூர்த்திகள் வேறுயாரைக்காண தவஞ்செய்யமுடியும்? முழுமுதற் கடவுள்கள், அதற்குமேல் அவர்களுக்கு வரந்தருபவர்கள் யாரும் இருக்கமுடியாது. மேலும், அவர்கள் முதற்கடவுள்களானதினால், தேவையானதென்று எதுவும் இருக்கமுடியாது. இருந்தாலும், மும்மூர்த்திகள் அடிக்கடி தவக்கோலம் பூணும் கதைகள் இருக்கின்றன. தவஞ்செய்யப்போய், அவலம்மிக்க செயல்களைப்புரிந்துவிட்டு அவர்கள் திரும்புவார்கள். பிரமதேவர் தவஞ்செய்யப்போய், ஒழுங்காக இருந்துவிட்டுத் திரும்பியது கிடையாது. ஒரு சமயம், காட்டில் தவஞ்செய்யப்போய், ஆசிரமம் அமைத்து, மேடைகள் அமைத்து, பிரமா தனியாக அமர்ந்திருந்தார். வேத வேதங்களை உண்டாக்கித்தந்த நான்முகனுக்குத் தவஞ்செய்வது மிகச்சுலபம் என்று மற்ற தேவர்கள், முனிவர்கள் நினைத்தார்கள். ஆனால் கடவுளான பிரமாவிற்கு அதைவிடக் கடினமானவேலை வேறொன்றும் இல்லை.

பிரமா தவக்கோலத்தில் இருந்தார். முற்றுந்துறந்து, யோகத்தில் மனதை இருத்தி, இருக்கவேண்டும். ஆனால் பிரமாவின் உள்ளம் தனிமையில் அமைதியடையாமல் இருந்தது. யோகத்தைமுடித்து எழும்பொழுது, பழைய பாசங்கள், நேசங்கள், காமநினைவுகள் அவரைச்சூழ்ந்தன. "சே" என்று கையை உதறிக்கொண்டாலும், மனதில் முளைக்கும் வேட்கையை அவரால் உதறித்தள்ள முடியவில்லை. தவஞ்செய்யும் தனக்குப்பணிவிடை செய்ய, தனது பத்தினி சரசுவதியை அவர் அழைத்துக்கொண்டார். அவள் அருகிலிருந்தால் தனிமைகுறைந்து தவஞ்செய்யலாம் என்று பிரமா நினைத்தார். ஆச்சிரமத்துக்கும், தவத்துக்கும் வேண்டிய பணிவிடைகளை சரசுவதி செய்துவந்தாள். தவமியற்றுபவருடன் கணவன்-மனைவி முறையில் நடந்துகொண்டால், தவங்கெட்டுவிடுமென்ற உணர்வுடன், சரசுவதி பணிப்பெண் போன்று அங்கு இருந்தாள்.

தவஞ்செய்பவர் பிரமா! அவரால் எப்படி ஒரு பெண்ணைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, காமநினைவில்லாமல் இருக்கமுடியும்? பெண்களில்லாவிட்டால்கூட, கற்பனையில் பெண்களைச்சிருட்டித்து, கூடிமகிழ்பவர். பக்கத்தில் ஒருபெண், அதிலும் அவருடைய மனைவி—மகள் என்ற முறையிலிருந்து மனைவியாக மாற்றப்பட்டபின் ஏற்பட்ட கதை இது—இருக்கும்பொழுது, அந்த மாதேவரால் பேசாமல், காமநினைவுகளை எண்ணாமல் இருக்க முடியாது? தவக்கோலத்திலிருந்தாலும், வாய் வேதங்களை முணுமுணுத்தாலும், கை யாகக் குண்டத்தில் நெய் வார்த்துக்கொண்டிருந்தாலும், கண்கள் மேல்நோக்கிப் பார்த்துக்

கொண்டிருந்தாலும்; அவருடைய மனம்மட்டும் மங்கைபால் கட்டுண்டுகிடந்தது. வெளிப்படையாகக் காட்டினாலோ, "தவக்கோலத்திலா இந்தப்பேச்சு?" என்று அவள் சீறுவாள். அதற்கும் பிரமாவிற்குப்பயம். அணலின் பக்கத்தில் வைக்கப்பட்ட மெழுகுப் பொம்மையைப்போல, சரசுவதியின் பக்கத்தில் இருந்த தவசி பிரமா உருகினார். கடைசியில் உருகியேப்போய்விட்டார். தவம் கெட்டாலும் பாதகமில்லை, இன்று என் தாபத்தைத்தீர்த்துக்கொள்வேன் என்று பிரமா தவமேடையைவிட்டு எழுந்து, வெளியே வந்தார். சரசுவதியைக் கூவியழைத்தார். அவள் ஆச்சிரமத்தினருகில் இல்லை. பகல் வேளை! நீராட அந்நேரம் சென்றிருந்தாள். கள்ளுண்டவன் கூவுவதைப்போல, காமவெறியுடன் கூவியபடி பிரமதேவன் ஓடினான், சரசுவதியைத் தேடிப்பிடிக்க, பிடித்து அணைக்க!

கூக்குரல்கேட்டு, நீராட ஆற்றில் அடியெடுத்து வைத்த சரசுவதித் திரும்பிப்பார்த்தாள். தவக்கோலம் அழிந்து, தலைவிரிகோலமாய், காமம் கொப்பளிக்கும் பார்வையுடன் பிரமா தன்னைநோக்கி ஓடிவருவதை அவள் பார்த்தாள். எதையும் எண்ணாமல், பாராமல் அவர் தன்னை அனுபவித்துவிடுவார் என்ற அச்சம் அவளுக்கு உண்டானது. இதுவரை அவர் செய்துவந்த தவம் வீணாகிவிடும். பழிக்கு உடன்பட மறுத்து, சரசுவதி திடீரென்று மறைந்துவிட்டாள்!

ஆவேசத்துடன், ஆவலுடன் ஓடிவந்த கடவுள், சரசுவதி திடீரென்று மறைந்ததும், பதைபதைத்தார், துடிதுடித்தார், காமவேதனை தாங்காமல் ஆற்றில் விழுந்து, தண்ணீரை அணைத்துக்கொண்டார்.

தூரத்தில், வெய்யல்கொடுமை தாளாமல், தாகவேட்கையுடன் ஒருபெண் ஆற்றில் இறங்கி தண்ணீர் அருந்தினாள். காமவெறியில், ஆற்றில் விழுந்து பிரமா அணைத்துவிடுத்த தண்ணீர், அந்தப்பெண் அருகே வந்ததாம். அந்தத்தண்ணீரைக் குடித்ததால், அந்தப்பெண் கர்ப்பவதியாகி, குழந்தையையும் பெற்றெடுத்தாளாம்!

பிரமதேவருக்குக் குழந்தைகள் பிறந்தது பலப்பல விதங்களில், முகத்தில், தோளில், தொடையில், காலில், தொண்டையில், உரோமத்தில், உடம்பின் எல்லாப் பாகங்களிலும்! அவர் மனதில் நினைத்தால் கூட உடனே எதிரில் குழந்தைகள் கூவிக்கொண்டிருக்கும், ஒரு தடவை அவர் தும்மினாராம். தும்மலில், ஒரு குழந்தை பிறந்து எதிரில் நின்றது. அந்தக் குழந்தைக்குக் குபன் என்ற பெயரிட்டு, பூலோகத்துக்கு அனுப்பினார். பூலோகத்தில் அப்பொழுது அரசர்கள் யாருமில்லாததால், குபனை அரசனாக ஏற்றுக்கொண்டார்கள்.

குபன் அரசாண்டு வருகையில் ததீசி என்ற முனிவர் அவன் அரண்மனைக்கு வந்தார். ததீசி என்பவர் ஒருகாலத்தில் பாற்கடலிலிருந்து வந்த ஆயுதங்களை விழுங்கி முதுகெலும்புடன் சேர்த்து வைத்திருந்து பின் இந்திரன் வச்சிராயுதஞ் செய்யக் கேட்டபொழுது, தமது முதுகெலும்பை அறுத்துத்தந்த முனிபுங்கவர். அவர் இவனுடன் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, "பிராமணர்கள் உயர்ந்தவர்களா? அரசர்கள் உயர்ந்தவர்களா?" என்று கேள்வி எழுந்தது. ததீசி பிராமணர்கள் உயர்ந்தவர்கள் என்று சொன்னார். குபன் அரசனாக இருப்பதால், அரசர்கள்தாம் உயர்ந்தவர்கள் என்று வாதாடினான். பேச்சு கடுமையாகி, ததீசி முனிவர் கோபத்துடன் தனது யோக தண்டத்தால் குபனை அடித்தார். குபன் தனது வாளை எடுத்து வீசி; ததீசி முனிவரை இரண்டு துண்டமாக வெட்டிப் போட்டான். வெட்டப்பட்ட தலை சுக்கிரனை நினைத்து வேண்டிக்கொள்ள, சுக்கிரன் உயிர்பிழைக்கும் மந்திரத்தைச் சொன்னாம். உடனே உயிர் பெற்று, உடலை ஒன்றாகக் கட்டாக ஆக்க, சிவனை நினைத்து ததீசி தவஞ்செய்தார். சிவன் வச்சிரத்தாலான உடலை அவருக்குத் தந்தார். வச்சிர உடலை அடைந்ததும், ததீசி அரசனைத் தலைமீது ஓங்கி உதைத்தார். தலை கீழே விழுந்து, குபன் இறந்தான். இவற்றையெல்லாம் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமன் தம் மானசீகக் கண்ணால் பார்த்தபடி இருந்தாராம். குபனின் தலை அறுந்து விழுந்ததைக்கண்ட 'அவர் அவன்மீது இரக்கங்கொண்டு குபனுக்கு உயிர்தந்து, அவனுக்கு உதவியாக தம்மைப்போல பல விட்டுணுக்களை மாயையால் உண்டாக்கி அனுப்பினாராம். ததீசி முனிவரும் சாமான்யப்பட்டவரல்ல! தன்னை எதிர்த்துப் பல மாயவிட்டுணுக்கள் வருவதைப் பார்த்துக் கலங்காமல், தமது கட்டை விரலை அவர் அசைத்தாராம். கட்டைவிரலில் இருந்து பல மாயவிட்டுணுக்கள் வெளிவந்து, ததீசிக்கு உதவியாகச் சண்டை போட்டார்களாம். குபனுக்கு உதவியாக, விட்டுணு தமது சக்ரத்தை அனுப்பினார். அதற்கும் ததீசி அஞ்சவில்லை. தருப்பைப்புல்லை எடுத்து, மந்திரமிட்டு, அனுப்பினாராம். அந்தத் தருப்பை, விட்டுணுச்சக்கரத்

துடன் எதிர்த்து நின்றதாம். சண்டை மிக்க கடுமையாவதைப் பார்த்த பிரமா தம் சத்திய வுலகைவிட்டு இறங்கிக் கீழே வந்து, குபனுக்கும் ததீசி முனிவருக்கும் உண்டான சண்டையை நிறுத்தி இருவரிடையேயும் அமைதி உண்டாகச் செய்தார்.

பிரமாவின் தும்மலிற் பிறந்த புத்திரசிகாமணி குபனுக்கும், ததீசி முனிவருக்கும் ஏற்பட்ட சண்டை மேலேகூறப்பட்டது. கதையை விட்டு, அதில் குறிக்கப்படும் கேள்வியைக் கவனிக்கலாம். பிராமணர் பெரியவரா? அரசர் பெரியவரா? இந்தக் கேள்வியை புராணகாரர்கள், புராணமெழுதிய பிராமணர்கள் கேட்டிருக்கிருர்கள் அரசனைவிட பிராமணன் உயர்ந்தவன் என்பதைப் பல கதைகளில் கட்டியிருக்கிருர்கள். அதில் ஒன்று குபன் - ததீசி புராணம். குபன் பூவுலகம் முழுவதையும் ஆளும் அரசன் ததீசி முதுகெலும்பையும் அறுத்துக்கொடுத்துவிட்டுச் சுற்றிவந்த முனி புங்கவர்—பிராமணேத்தமர். படை பல மிக்க மன்னன் முன் முதுகெலும்பற்ற முனிவர். அரசனுக்கு உதவியாக விட்டுணு இருந்தார், மாயவிட்டுணுக்கள் வந்தார்கள், அவருடைய சக்கரம் வந்தது. ததீசி கட்டைவிரலை அசைத்தார். தருப்பையை வீசினுர். முடிமன்னன் ஆனுலும், மும்மூர்த்தி ஆனுலும் பிராமணனை எதிர்த்து நிற்கவில்லை. கடவுளின் சக்கிரத்தை எதிர்த்துநிற்கும் ஆற்றல் பிராமணனின் தர்ப்பைக்கு இருந்தது. இத்தகையப் புராணக் கதைகள் இருக்கும்பொழுது, அவற்றை நம்புவதற்கு மன்னர்கள் இருந்தபொழுது, பிராமண முனிவர்கள் உயர்ந்து விளங்கினுர்கள், அவர்கள் கையிலிருந்த தருப்பைப்புல் மன்னர் தம் அயுதங்களையெல்லாம் அடக்கி ஆண்டது.

அரசனுக இருந்த விசுவாமித்திரன் முனிவராக இருந்த வசிட்டரின் முன் தோற்ருேடி, பின் அரசராகயிருப்பதைவிட முனிவராக இருப்பதுமேல் என்று முனிவரான கதையும் மேற்சொன்ன குபன்—ததீசி கதையின் கருத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தக் கதைகள்—புராணங்கள் எல்லாம் அரசர்களைவிட பிராமணர்கள் குலத்திலும் வலுவிலும் உயர்ந்தவர்கள் என்பதை நிலைநாட்டின.

மீண்டும் பிரமதேவனிடம் வருவோம். உலகத்துக்கு ஒழுக்கங்களை உபதேசிப்பதாகக் கூறப்படும் வேதங்களின் பிதாவான பிரமா முக்கிய ஒழுக்கம் எதையும் கடைப்பிடித்ததில்லை. காமத்தால் எவ்வளவு கடைத்தர செயலுக்கும் பிரமா சென்றிருக்கிருர் என்பதைப் பார்த்தோம். பொய் சொல்லுவதிலும் பிரமா பின் வாங்கியதில்லை. சிவனின் முடியைக் கண்டுபிடித்துவிட்டதாகப் பிரமா பொய் சொன்ன கதை பலருக்குத் தெரிந்திருக்கலாம். தங்களுக்குள் யார் பெரியவர் என்ற சண்டை பிரமாவுக்கும் விட்டுணுவுக்கும் உண்டானதாம். அதைத் தீர்த்துவைக்க சிவனிடம் போய்ச் சேர்ந்தார்கள். சண்டையின் விவரத்தைக்கேட்ட சிவன் மிக உயரமாக வளர்ந்து, முடியையும் பாதத்தையும் கண்டு பிடியுங்கள், என்று இருவருக்கும் போட்டி தந்தாராம், முடியைக் கண்டுபிடித்து வருகிறேன் என்று பிரமா அன்னப் பறவையாகி மேலே பறந்து போனுராம். பாதத்தைப் பார்த்து வருகிறேன் என்று பன்றி உருவத்துடன் பூமியைக் குடைந்துகொண்டு திருமால்போய்க்கொண்டிருந்தார். அன்னப் பறவையான பிரமா பறந்துகொண்டேயிருந்தார். சிவனுடைய முடியைக் காணவே முடியவில்லை. அது எட்டிக் காண முடியாத உயரத்திலிருந்தது. போட்டியில் தோற்றுப்போனதாக ஒப்புக்கொள்ளவும் பிரமாவுக்கு மனமில்லை, மேலே பறந்து சென்றபடி இருந்தார். அப்பொழுது தாழம்பூ ஒன்று கீழே பறந்து வந்துகொண்டிருந்தது. பிரமாவை அடையாளங் கண்டுகொண்ட தாழம்பூ கேட்டதாம் "பிரமாவே! எங்கே பறந்துபோய்க்கொண்டிருக்கிறீர்கள்?" என்று

"நீ யார்?" எங்கிருந்து வருகிருய்?"

"சிவனுரின் முடியிலிருந்து விழுந்து வருகிறேன்" என்று தாழப்பூ சொன்னது.

களைத்துப்போயிருந்த பிரமாவுக்கு உற்சாகம் வந்தது. "அப்படியானுல் சிவனின் முடி மிகப் பக்கத்தில் இருக்கிறதா?" என்று பிரமா கேட்டார்.

"நான் பலகோடி யுகங்களுக்குமுன் அந்த இடத்தைவிட்டு விழ ஆரம்பித்தேன். இன்னும் மண்ணுக்கு வரவில்லை."

தாழம்பூ சொன்னதைப் பார்த்தால், சிவனின் முடியைக் காணமுடியும் என்ற நம்பிக்கைப் பிரமாவுக்குப் போய்விட்டது. ஆனுல் ஒரு யோசனை பிரமாவுக்குத் தோன்றியது.

பிரமா தாழம்பூவை. மெதுவாகக் கூப்பிட்டார். "தாழம்பூ! சிவனின் முடியைக்காண நான் புறப்பட்டேன். நீ அங்கிருந்து வருவ

தால்; நான் முடியைப் பார்த்துவிட்டதாகச் சொல்வதால், நீ ஆம் என்று சாட்சி சொல்லி விடு! மற்ற யாருக்கும் இது தெரியாது."

மும்மூர்த்திகளில் ஒருவர் தன்னை வேண்டிக் கேட்டுக்கொள்ளும்பொழுது, மறுக்க மனமின்றி தாழம்பூ சாட்சி சொல்ல, ஒப்புக்கொண்டது. தாழம்பூவும், பிரமாவும் மண்ணுக்கு வந்து சேர்ந்தார்கள்.

வடிவத்தைச் சுருக்கிக்கொண்டு சிவன் நின்றார். மகாவிட்டுணு, பிரமா எதிரில் நின்றார்கள். பிரமாவின் பக்கத்தில் தாழம்பூ கிடந்தது.

"போட்டியின் முடிவென்ன?" சிவன் கேட்டார்.

"உங்கள் பாதத்தை என்னால் காண முடியவில்லை." மகாவிட்டுணு ஒப்புக்கொண்டார்.

"பிரமா வெற்றிப் புன்னகையுடன் முன் வந்தார். "உங்கள் முடியை நான் பார்த்து விட்டேன்."

"உண்மையாகவா?" சிவன் திருப்பிக் கேட்டார்.

"சத்தியமாக! உங்கள் முடியை நான் பார்த்தேன் என்பதற்கு, உங்கள் முடியிலிருந்த தாழம்பூ சாட்சி! உங்கள் முடியை நான் பார்த்த பொழுது இது அங்கிருந்தது. சாட்சிக்காக உடனழைத்து வந்தேன்."

"ஆமாம்! பிரமதேவர் சொல்வது உண்மை! நான் சாட்சி" என்று தாழம்பூ சொல்லியது.

சிவன் தனது நெற்றிக் கண்ணை இல்லை ஞானக்கண்ணைத் திறந்து பார்த்தார், நடந்த விபரம் தெரிந்து கொண்டார். தாழம்பூவும், பிரமாவும் பேசிக்கொண்டது அவருக்கு முக்கால உணர்வில் கேட்டது.

"பொய் சொல்லுகிறீர்கள்! பிரமாவே! நீ என் முடியைப் பார்க்கவில்லை. பாதிதூரம் போய் திரும்பிவிட்டாய். வழியில் பார்த்த தாழம்பூவைப் பொய் சாட்சி சொல்லச் செய்திருக்கிறாய்! என்முன் நிற்காமல் போ! பொய் சொன்ன உனக்கு உலகில் கோயில்கள் இல்லாமற் போகக்கடவது! தாழம்பூவே! நீ பிரமாவுக்கு உதவியாகப் பொய் சாட்சி சொன்னதால், உன்னை இனிமேல் நான் அணிந்து கொள்ள மாட்டேன், போ!" என்று சாபங் கொடுத்து சிவன் அனுப்பினார்.

பொய் சொல்வதில் அதிலும் தன்னுடைய சகாவான மற்றொரு கடவுளிடம் பொய்சொல்ல பிரமா தயங்கவில்லை. அதற்கு ஆதாரமாக, பொய்சாட்சி ஒன்றையும் அவர் தயாரித்து வைத்துக்கொண்டார்.

நுண்ணணுவின் நடனம்!

✶

ஒவ்வொரு அணுவிலும் அதன் மையப்பொருளைச் (Nucleus) சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருக்கும் எலக்டிரான்கள் (Electrons) என்னும் நுண்ணணுக்கள் ஒரு நொடிப்பொழுதில் (Second) கோடானுகோடி தடவைகள் வட்டமிட்டு விடுகின்றன. செயின்ட்பால் கதிட்ரெல் (St. Paul's gathedral) என்னும் பெரிய மாதாகோவிலில் வட்டமிட்டுவர, ஒரு தேனீக்கு எவ்வளவு பரந்த இடம் கிடைக்குமோ, அவ்வளவு பரந்த இடம், ஒவ்வொரு அணுவிலும், ஒவ்வொரு எலக்டிரானுக்கும் வட்டமிட்டுவர கிடைக்கின்றது.

— சர் ஆலிவர் லாட்சு
(Sir Oliver Lodge)

மூடநம்பிக்கையைவிட நாத்திகம் சிறந்தது

[ஆங்கிலத்தில் திறம்பட உரைநடை எழுதும் ஆசிரியர்களில் பேக்கன் என்பவர் சிறந்த ஒருவர். இவர் எழுதிய கட்டுரைகள் யாவும் சொல்நயமும் பொருள் நயமும் பொருந்தியன. ஆங்கிலங் கற்றவர்களில் பேக்கனுடைய கட்டுரைகளை வியவாதாரிலர். இவர் மதத்தை வெறுப்பவரல்லர்; நாஸ்திகரல்லர். மத நம்பிக்கையுடையவர்; ஆஸ்திகர். இவர் மூடநம்பிக்கையால் விளையும் தீமையைப் பற்றிக் கூறியிருக்கும் அரிய மொழிகள் மிகவும் பாராட்டத்தக்கனவாகும் S. C பரன்.]

கடவுள் நம்பிக்கையில்லாதது குற்றமுள்ளதல்ல; கடவுளை நம்பாமையால் தீமை உண்டாகி விடாது; ஆனால் கடவுளைப்பற்றிய மூடநம்பிக்கையினால் பெருந்தீமையுண்டாகும். கடவுளை நம்பாதிருத்தல் "நம்பிக்கையில்லை" என்ற அளவோடு நின்றுவிடுகிறது. ஆனால் மூடநம்பிக்கை மிகவும் வெறுத்து ஒதுக்கத் தகுந்த அவ்வளவு தீமைகளை உண்டாக்கி விடுகின்றது.

"கடவுள் ஒரு குழந்தையை விழுங்கி விட்டது" என்பது போன்ற கொடுமை நிறைந்த கற்பனைக் கதைகளைக் கூறுவதை விட—இக்கதைகளை நம்புவதை விட, கடவுள் இல்லையென்று கூறுவது எவ்வளவோ மேலான அறிவாகும். இத்தகைய மூடநம்பிக்கை மனித சமூகத்துக்கும் மிகுந்த துன்பத்தை உண்டாக்குகிறது.

நாஸ்திகர்கள் இயற்கை நியதிகளை மீறாமல் அவைகளுக்குக் கட்டுப்படுகிறார்கள், இயற்கை நியதிக்குத் தக்கவாறு சட்ட திட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள்; சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத் தங்கள் அறிவை உபயோகித்து நடந்துகொள்ளுகிறார்கள். ஆனால் மூடநம்பிக்கையுள்ளவர்களோ அறிவில்லாதவர்களாகவும், நன்மை தீமை உணராதவர்களாகவும், அடிமைப் புத்தியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

உரோமாபுரியில் அகஸ்டர், சீசர் முதலியவர்கள் வாழ்ந்த காலத்தில் நாஸ்திகம் பரவியிருந்தது. அப்பொழுது நாஸ்திகத்தினால் மக்களுக்கு ஒருவித தீமையும் உண்டாகவில்லை. (பெரும்பாலும் நன்மையே விளைந்தது) ஆனால் மூடநம்பிக்கை காலத்தில், மூடநம்பிக்கை நிறைந்த தேசங்களில் எல்லாம் குழப்பங்களும், கலவரங்களுமே மிகுந்தன. மூடநம்பிக்கையினால் குழப்பமடையாத தேசமே இல்லையென்று கூறலாம்.

மூடநம்பிக்கைக்கு அதிகாரிகளாக இருப்பவர்கள் பொதுஜனங்கள். பொதுஜனங்களின் அபிப்பிராயத்துக்கு விரோதமாக நடப்பவர்களுக்குத் தேசத்தில் மதிப்பிருக்காது. ஆதலால் அறிவு படைத்தவர்களும் கெட்டிக்காரர்களுங்கூட மூடநம்பிக்கையை எதிர்த்து நிற்கத் துணிவதில்லை; அவர்களும் மூடநம்பிக்கையுள்ள பொதுஜனங்களைப் பின்பற்றத்துணிகிறார்கள்.

ஒருகாரியம் சரியா, தவறா என்பதைக் காரணங்களைக்கொண்டு கண்டுபிடிக்கவேண்டும். சரியான காரணங்களைக்கொண்டு ஏற்படும் காரியங்களே உண்மையானதாக இருக்க முடியும்; நன்மையளிப்பதாகவும் இருக்கக் கூடும். ஆகவே காரணங்களைக்கொண்டு காரியங்களை உண்டாக்குவதே—நிலைநிறுத்துவதே அறிவுடைமையாகும். முதலில் காரணத்தையும், பிறகு காரியத்தையும் கண்டுபிடிப்பதே அறிவின் செயலாகும். ஆனால் மூடநம்பிக்கையுள்ள நாம் இதற்கு மாறாக முதலில் காரியத்தையும், பிறகு காரணத்தையும் கூறுகிறோம். முதலில் காரணத்தைக்கூறி பிறகு காரியத்தை நிலைநிறுத்த முடிவதில்லை. இது தலைகீழான பாடமாகும். ஒவ்வொரு பழக்க வழக்கங்களுக்கும் புதியபுதிய காரணம் கண்டுபிடித்து கூறி அப்பழக்கவழக்கங்களை நிலைநிறுத்த முயற்சிக்கிறோம் இது மூடநம்பிக்கையின் விளைவேயாகும்.

மூடநம்பிக்கைக்குக் காரணங்கள் பல; அவை வருமாறு:—

1. அறிவு வளர்ச்சிக்குச் சிறிதும் துணை செய்யாததும், பணத்திற்கு நஷ்டத்தை உண்டாக்குவதும், தெய்வீகமானவையென்னும் நம்பிக்கையினால் மனத்திற்கு மாத்திரம் திருப்தியளிப்பதுமான பலவித சடங்குகளைச்

செய்வதும் மூடநம்பிக்கை நிலைத்திருப்பதற்கும் வளர்வதற்கும் காரணமாகும்.

2. ஜாதி, மதங்களின் வித்தியாசத்தைப் பிரித்துக்காட்டக் கூடிய ஆடை ஆபரணங்களும், மதச் சின்னங்களும், ஆகிய வெளி விஷயங்களும் மூட நம்பிக்கைக்கு ஆதாரமாகும்.

3. பழைய பழக்க வழக்கங்கள் எவையாயினும் அவைகளின் நன்மை தீமைகளை ஆராய்வதில்லை; அவைகளிடம் அதிக மரியாதை வைத்து அவைகளைக் கொண்டாடுதல், இவ்வாறு செய்ததால் உண்மையான மதம் இன்னதென்றே அறிய முடியாமல் அழிந்துவிட்டது. இச்செயலும் மூடநம்பிக்கைக்குக் காரணமாகும்.

4. குருமார்கள் என்பவர்கள், தாங்கள் உடம்பை வருத்தி வேலை செய்யாமல் பொருள் சேர்க்கவும், சுகமாக வாழவும் ஆசைகொண்டு ஏற்படுத்தியுள்ள பலவிதமான சூழ்ச்சிகளையும் நம்புதல்; இந் நம்பிக்கையினுல் ஏமாறுதல்; ஆகியவையும் மூடநம்பிக்கையை வளர்ப்பதாகும்.

5. மனத்தில் கர்வத்தை உண்டாக்குவதும் புதுமையை உண்டாக்குவதுமான எண்ணங்களைக் கொண்டாடுதலும் மூடநம்பிக்கைக்குக் காரணமாகும்.

6. மனிதன், இன்பம் துன்பம் அடைவது போலவும், வேண்டியவர்க்கு நன்மையும், வேண்டாதவர்களுக்குத் தீமையும் செய்வது போலவும், பெண்டு பிள்ளைகளுடன் வாழ்வது போலவும், இழிந்த காரியங்களையும் வெறுக்கத் தகுந்த காரியங்களையும் செய்வது போலவும், கடவுளையும் கற்பனை செய்து மனிதனைப்போல வைத்துக் கொண்டாடுவதனுலும் மூடநம்பிக்கை உலகில் பரவுகிறது.

7. மனிதன் அறிவுவளர்ச்சி பெறுமல் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில் தனது உடம்புக்குக் கெடுதி அதாவது நோய் முதலியன ஏற்பட்டபோது அவைகளைச் சிகிச்சையின் மூலம் நீக்கிக்கொள்ள வழி தெரியாமலிருந்தான். அப்பொழுது அவன் எவைகளைத் தெய்வமென்று நம்பிக்கொண்டிருந்தானே அவைகளைத் தனது தீமைகளையும் நீக்கும்படி வேண்டிக்கொண்டான். இவ்வாறு தமக்கு நேர்ந்த தீமைகளை நீக்குமாறு தெய்வங்களை வேண்டிக்கொள்ளுதல் மனிதனுடைய காட்டுமிராண்டிப் பருவத்தில் ஏற்பட்ட பழக்கம் என்று அறியாமல், அப்பழக்கத்தையே இப்பொழுதும் கொண்டாடிக் கொண்டிருப்பதும் மூட நம்பிக்கை வளர்வதற்கு வழியாகும்.

மூட நம்பிக்கையை ஒரு குரங்குக்கு ஒப்பிடக்கூறலாம். குரங்கு இயல்பிலேயே குறும்புத்தனமுடையது. அதன் கையில் அகப்படக் கூடிய பொருள்களை அது சும்மா வைத்திருக்குமா? அந்தப் பொருள்தான் உருப்படியாக இருக்குமா? அதுபோல் மூடநம்பிக்கையே கெடுதியாக உருவெடுத்ததாகும். அது மதத்தோடு சேர்ந்திருக்குமானுல் இன்னும் அதிக தீமையையே செய்து தீரும். அந்த மதமும் சின்னுபின்னமாகி மக்களுக்கும் தீமை செய்யும் என்பதில் என்ன சந்தேகம். *

நல்ல ஆகாரமானுலும் அவற்றை நாள்பட வைத்திருப்போமானுல் கடைசியில் அவை புழுவாக மாறிவிடுகிறது. அதுபோல நல்ல மதமும்கூட நாள்பட்டவுடன் பல சடங்குகளாக மாறுகிறது.

---

* மூடநம்பிக்கையே மதம் உண்டாதற்குக் காரணம். மூடநம்பிக்கை ஒழியுமானுல் மதமும் ஒழிந்துவிடும். பகுத்தறிவை ஆதாரமாகக்கொண்டது என்று கூறும் எந்த மதமும் மூடநம்பிக்கையையே அடிப்படையாகக் கொண்டது என்பதில் ஐயமில்லை. பகுத்தறிவை ஆதாரமாகக்கொண்டு ஒரு மதம் இருக்குமானுல் அதில் கடவுள், ஆன்மா, சுவர்க்க நரகம் முதலியவை இருக்க முடியாது. S. C.

வேதனைக்கு எதிரே

★

"அவன் ஒரு இளைஞன். வாழ்க்கையின் இன்பத்தை நுகரவேண்டிய பருவத்தில், காலிலே ஏற்பட்ட கொடியதோர் புண் புரையோடி அவனைப்பெரிதும் வாட்டியது. அவன் உயிருடன் உலவவேண்டுமென்றால், காலிழந்தவனாக — நொண்டியாக ஆகவேண்டுமென முடிவு கூறினர் மருத்துவர். இளைஞன் மருத்துவ மனைக்குக் கொண்டுவரப்பட்டான். மருத்துவர் அவனுடைய காலை வெட்டிவிடுவதற்கான பணியைத் துவங்கினார். அவன் எவ்வித எதிர்ப்பையும் காட்டாமலிருக்க, நான்குபேர்கள் அவனுடைய உடலை அழுத்திப்பிடித்துக்கொண்டனர். மருத்துவர் ஒரு இரம்பத்தை எடுத்து மரத்தை அறுப்பது போல் சர சரவென்று அவனது காலை அறுக்கத்தொடங்கினார். இளைஞனோ கதறினான் வேதனை தாங்கமுடியாமல். அவனால் 'அசையவும' முடியவில்லை, அறுப்பதைத் தடுக்கவும் முடியவில்லை. கதறிக் கதறி அவனுடைய குரல் கம்மிவிட்டது. மருத்துவர் வேலையைத் துரிதமாக முடித்தார். முழங்கால்வரை இளைஞனுடைய கால் துண்டிக்கப்பட்டது.''

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் மேனாட்டு மருத்துவமனைகளிலே இப்படிப்பட்ட ரண மருத்துவ முறைதான் கையாளப்பட்டது.

அந்தக் காட்சியை நினைத்தாலே இப்போது நமக்கு மயிர்க்கூச்சம் ஏற்படுகிறது. ரண மருத்துவ வேதனையை நீக்க இப்போது மயக்க மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் மயக்க மருந்துகள் கண்டுபிடிப்பதற்கு முன்னால் அதாவது சென்ற ஒரு நூற்றாண்டுக்கு முன்புவரை மக்கள் வேதனைபுரியில்தான் வாழவேண்டியவர்களாக இருந்தார்கள்.

வேதனை மனிதனின் உடன்பிறப்பாகும். இயற்கையிலுள்ள பொருள்கள் அனைத்தும் அவனுடைய வேதனையை அதிகமாக்கிக் கொண்டுதான் இருக்கும். அவைகளின் தன்மையை அறிந்து அவைகளை அடக்கி ஒழுங்குபடுத்தினால்தான் அவனுடைய வேதனை குறைய வழி ஏற்படுகின்றது. ஆரம்ப காலத்தில் இயற்கையின் ஆற்றலை அறிந்து கொள்ளும் திறன் மனிதனுக்கு ஏற்படவில்லை. அச்சம் அவனுள்ளத்தில் குடிகொண்டது. அந்த அச்சத்தின் காரணமாகவே அண்மைக்காலம் வரையில் வேதனைபுரியில் வாழவேண்டியவனாக இருந்தான்.

இன்று நாம் நமது உடலிலே ஏற்படக்கூடிய வேதனையைப் போக்கிக்கொள்ளத் தயங்குவதில்லை. ஆனால் அன்று அப்படிச் செய்வது கடவுள் விரோதமான காரியம் என்று கருதப்பட்டது. கடவுளின் கோபத்தினால்தான் புயல், வெள்ளம், நோய், சாவு—வேதனை உண்டாக்கப்படுகின்றது என்று நம்பினர். இன்றுகூட நம் நாட்டில் அம்மை நோய் வந்தால் மாரியம்மா கோபம் என்றும், தேள் கொட்டினால் பிள்ளையார் கோபம் என்றும் நோய்க்கு ஒரு கடவுளைக்கொண்டு வேண்டுதலையும் படைப்புகளையும் செய்து மூடநம்பிக்கைக்கு ஆட்பட்டு வேதனையை மேலும் அதிகமாக்கிக்கொள்கின்றனர்.

என்றாலும் மனிதன் கடவுட் கொள்கைகளுக்கு மாறான வழிகளில் வேதனையை நீக்க முயலாமலில்லை. அரைமனதோடு வேதனையைக் குறைக்க, நீக்க பலவித முயற்சிகளையுங் கொண்டனர்.

உணர்ச்சியற்ற நிலையில் உடல் வேதனையை மறக்கும்படியாகச் செய்யும் ஆரம்பகாலப் பொருளொன்றை நாம் பார்ப்போமானால் அது மதுவாகும். மது உணர்ச்சியை ஓரளவுக்குக் குறைத்து ஆழ்ந்த உறக்கத்தையும் கொடுக்கின்ற தன்மையினால்தான் உழைப்பாளர்களில் பெரும்பாலோர் மதுவருந்தி, உழைப்பினால் ஏற்பட்ட தங்கள் உடல் வேதனையை ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ள முற்படுகின்றனர்.

மயக்கத்தை கொடுக்கக்கூடிய பல பொருள்கள் பண்டைய காலத்தில் பல நாட்டினராலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் மண்டிரகோரா (Mandragora), கன்னபிஸ் (Cannabis) ஹென்பேன் (Henbane), அபின், சாராயம் முதலியன முக்கியமானவையாகும்.

உடல் வேதனையை நீக்கப் பண்டைய மக்களால் இப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டன என்றாலும், பெரும் ரணமருத்துவங்களுக்கு இவை பயன்படாமல் இருந்திருக்கின்றன. ரணமருத்துவம் பண்டைய மக்களால் சிறப்புறக் கையாளப்பட்டது என்று சிலர் இப்பொழுது கூறமுற்படுகின்றனர். ஆனால் இதற்கு உறுதுணைக் குறிப்புகள் எதுவும் கிடையா. ஒரு மருந்தைக் கொடுத்து அதன்மூலம் நோயாளியின் உணர்வு அறவே நீக்கப்பட்டு ரணமருத்துவம் பண்டைய மக்களால் கையாளப்பட்டிருந்தால், சிறு சிறு மருந்துகளுக்கெல்லாப், சிறு சிறு நோய்களுக்கெல்லாம், மிக எளிய மருத்துவ முறைகளுக்கெல்லாம் விளக்கமான குறிப்புகள் எழுதிவைத்துவிட்டுச் சென்றவர்கள், வேதனையை அறவே நீக்க வல்ல ரணமருத்துவ மயக்கமருந்தைப் பற்றி விளக்கமான குறிப்புகளும் எழுதிவைத்திருக்க வேண்டும். ஆனால் அத்தகைய குறிப்புகள் ஏதும் கிடைத்திலது. ஆனால் பண்டைய மக்கள் ரணமருத்துவ முறையை கையாளவில்லை என்ற முடிவும் கொள்ளமுடியாது. ரணமருத்துவ முறை பன்னெடுங் காலமாகவே கையாளப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் ரணமருத்துவம் செய்யும்போது நோயாளி அதன் வேதனையைப் பொறுத்துக்கொள்ள வேண்டியவனாக இருந்தான். மேற்குறிப்பிட்ட மருந்துகள் ஓரளவிற்கு உணர்வை நீக்கப் பயன்பட்டனவே யல்லாமல், ரணமருத்துவம் செய்யும்போது ஏற்படும் வேதனையை அறவே நீக்கி மருத்துவர் நன்றாக தனது பணியைச் செய்யும் அளவிற்கு அவை பயன்படவில்லை.

மேலும் அந்த மருந்துகளெல்லாம் சிறிது அதிகமாக உட்கொள்ளப்படும்போது உயிருக்கு ஆபத்தான நிலைமையையும் பொதுவாக நரம்புத் தளர்ச்சியையும் உண்டாக்கியதால் ரணமருத்துவத்துறையில் அவைகளுக்குரிய முக்கியத்துவம் நாளடைவில் மறையத் தொடங்கியது.

பண்டைய மக்களால் உடல் வேதனையை நீக்கப் பெரிதும் பயன்படுத்தப்பட்ட மருந்து **மான்டிரகோரா** என்பதாகும். **மான்டிரேக்** என்றும் அதனை அழைத்தனர். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பாபிலோனியர்களால் இம்மருந்து பயன்படுத்தப்பட்டது என்று தெரிய வருகிறது. எகிப்தியர், கிரேக்கர், இந்தியர், சீனர் முதலியவர்களும் இதனை யறிந்திருக்கிறார்கள். மான்டிரகோரா என்ற செடியின் வேரிலிருந்து இம்மருந்து தயாரிக்கப்பட்டது.

இந்த செடியைப் பற்றி பண்டைய கிரேக்க மக்களிடத்தில் மூடநம்பிக்கையின்பாற்பட்ட கருத்தொன்று நிலவியது. அந்தச்செடியினுள் ஒரு பேய் குடிகொண்டிருக்குமாம். செடியை வேருடன் எடுக்க எவரேனும் முயன்றால் அந்தப் பேய் கூச்சலிடுமாம். இந்தக் கூச்சலைக் கேட்ட எவரும் உயிர் பிழைத்திருக்கமுடியாதாம். ஆகவே மருத்துவர்கள் ஒரு நாயின் காதோடு செடியைக்கட்டிவிட்டு நாயின் அசைவினால் வேருடன் வெளியேறும் செடியைப் பெறுவார்களாம்.

இக்கட்டுக்கதையானது, அந்த மருத்துவ முறை ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடமே தங்கியிருக்கவேண்டும் என்ற நோக்கங்கொண்டு எழுப்பப்பட்டதாகவும் இருக்கலாம்.

இன்று மருத்துவ உலகில் மான்டிரகோராவிற்குச் சிறப்பிடம் கிடையாது. அந்தப்பெயர் நினைவிலிருந்து அழிந்துகொண்டிருக்கிறது. ஆனால் அக்காலத்தில் ரணமருத்துவத்தின் போது அம்மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறதாகச் சில குறிப்புகள்மூலம் தெரியவருகின்றது. மன்டிரகோராவை உட்கொண்டால் என்ன நிலைமை யுண்டாகும் என்பதை விளக்கும் விதமாக ஆங்கில மகாகவியான வில்லியம் ஷேக்ஸ்பியரின் நாடகங்களிலே சில குறிப்புகள் வருகின்றன.

" ஆன்டனி என்னைப் பிரிந்து போய்விட்டான்! எனக்கு மான்டிரகோரா பானத்தைக் கொடு! மிக நீண்ட இடைக்காலத்தை நான் தூங்கித்தான் கழிக்கவேண்டும்!" என்று ஆன்டனியின் பிரிவால் வேதனையுறும் கிளியோபாட்ரா கூறுகிறாள், **ஆன்டனியும் கிளியோபாட்ராவும்** என்ற நாடகத்தில்,

" அல்லது, அறிவைச் சிறையாக்கும் அந்த உன்மத்த வேரைத்தான் நாம் உட்கொண்டு விட்டோமா?" என்று பாங்கோ என்ற படைத்தலைவன் மாக்பெத்திடம் கூறுகிறான், **மாக்பெத்** என்ற நாடகத்தில்.

" நேற்று நீ பெற்ற இன்பமான தூக்கத்தை அபினோ அல்லது மான்டிரகோராவோ அல்லது உலகத்திலுள்ள தூக்கத்தைக் கொடுக்கிற எல்லா தேனமருந்துகளுமோ என்றும் கொடுக்காது." என்று இயாகோ என்பவன் கூறுகிறான் **ஒத்தெல்லோ** என்ற நாடகத்தில்.

மேற்கண்ட குறிப்புகளிலிருந்து மான்டிரகோராவின் தன்மையை நாம் ஓரளவுக்கு அறிந்துகொள்ள முடிகிறது. அதை உட்கொண்டால், 'மன' வேதனை நீங்கி நன்றாக

உறக்கம் ஏற்படும், அறிவை இழக்கச்செய்யும், இன்பமயமான தூக்கத்தைக் கொடுக்கும் என்ற கருத்துக்களை ஷேக்ஸ்பியர் எடுத்துக் காட்டியுள்ளார். ஆகவே மான்டிரகோராவும் மெதுவாக, ஒரு போதைப் பொருளாக விளங்கியிருக்க வேண்டும். போதைப் பொருள்கள் உணர்வை சிறிதளவிற்கும் அறிவைப் பெருமளவிற்கும் கட்டுப்படுத்தக்கூடியனவாகும். அவை மனிதனின் உணர்வை அறவே நீக்காது; மன அமைப்பிலுள்ள பகுதிகளுக்குள் கொந்தளிப்பு ஏற்படச்செய்து அவனை நினைவையும் அதன் மூலம் அவனது செயல்களையும் மாற்றிவிடுகிறது.

இந்தக் காரணத்தினால் மான்டிரகோரா நாளடைவில் ரணமருத்துவத்தில் பயன்படாமல் கைவிடப்பட்டிருக்கலாம். பண்டைய காலத்தில், குறைகள் பல இருப்பினும், உடல் வேதனையை நீக்கப் பெரிதும் பயன்படுத்தப்பட்ட மருந்து மான்டிரகோராவாகும்.

ரணமருத்துவத்தில் மாண்டிரகோராவின் சிறப்பு நாளடைவில் குறைந்து அழிந்துவிட்டதென்றாலும், பண்டைக் காலத்தில் அது மிகவாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பல நூல்கள் தெரிவிக்கின்றன.

மாண்டிரகோராவைப்போல் கன்னபிஸ் என்ற மருந்தும் பண்டைய நாட்களில் வேதனை போக்கும் பொருளாகக் கருதப் பட்டிருக்கிறது. கன்னபிஸ் இன்டிகா என்ற முதன்முதல் இந்தியாவில் தோன்றிய ஒருவகை நார்ச் செடியிலிருந்து அம்மருந்து தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இச்செடி பல நாடுகளிலும் பரவி பயிராக்கப்பட்டுப் பலவகையான பெயர்களுடன் அழைக்கப்பட்டது. ஹாஷிஷ், பாங், குவாசா, கஞ்சா, சாரஸ், மொமேகா, மாயோ, மரிஜுவானா என்று அவை பலவாகும்.

தென் அமெரிக்காவில் மெக்சிகோ பகுதிகளில் இச்செடி மரிஜுவானா என்றழைக்கப்பட்டது. அங்கு வாழ்ந்தோர் அதன் போதை தரும் தன்மையை அறிந்து, செடியின் பூவையும் இலையையும் உலரவைத்து இடித்து, சுருட்டுகளாக புகைப் பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டனர். நம் நாட்டில் கஞ்சாவை வைத்துப் புகைப்பிடித்து பசி தெரியாமல் மயங்கிக் கிடக்கும் பண்டாரங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். அதுபோல தென் அமெரிக்காவில், மரிஜுவானா சுருட்டுகள் விளங்கின. சென்ற நூற்றாண்டில் வட அமெரிக்காவில் மரிஜுவானா சுருட்டுகள் ரீபர்ஸ் என்ற சிகிரெட்டுகளாகத் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

ஆனால் உடல்வேதனையை நீக்க ரணமருத்துவத்தில் பயன்பட்டதாகத் தெரியவில்லை. கஞ்சா, மரிஜுவானா போன்ற பொருள்களை புகைப்பிடிப்பது உடல்நலத்திற்கு மிகுந்த கேடு விளைவிப்பதோடு விலக்கயியலாப் பழக்கமாக ஆகி, ஒருகாலத்தில் வேதனை தீர்க்கும் மருந்தெனக் கருதப்பட்டு வரவேற்கப்பட்ட பொருள் நாளடைவில் வேதனை தரும் பொருளாக மாறிவிட்டது. கன்னபிஸ் மருந்துகள் மருத்துவத்தில் இன்று எதற்கும் பயன்படுவதில்லை.

ஹென்பேன் என்ற மருந்தும், அதிகச் சிறப்பு பெறுவிட்டாலும், பண்டைய மக்களால் வேதனையைப் போக்கக் கையாளப்பட்டிருக்கிறது. இன்று ஹென்பேன், ஸ்கோபோலமைன் என்ற பெயரில் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் ரணமருத்துவத்திற்கு அது பயன்படுவதில்லை. 'அறைத் தூக்க'த்திற்கும், பொய்மை கண்டுபிடிப்பதற்கும், அது மார்பின் என்ற மருந்தோடு சேர்த்துக் கொடுக்கப்படுகிறது.

அபின் பன்னெடுங் காலமாக மக்கள் அறிந்திருந்த ஒரு பொருளாகும். உடல்வேதனையைத் தீர்க்க அது பழங்கால மக்களால் திராட்சை ரசத்தில் கலந்து கொடுக்கப்பட்டது. நம் நாட்டில் அபின் செடியைக் கசகசாச் செடி என்றழைக்கின்றனர். முதலில் செடியின் முழுபாகமும் மருந்தில் சேர்க்கப்பட்டது. பிறகு மலரின் அடிக்கிண்ணத்திலுள்ள தேன் மிகுந்த வலிமையுடையது என்று கண்டுபிடிக்கப்பட்டது. அண்மைக்காலம் வரை உடல் வேதனையை நீக்க அபின்தான் பெரிதும் பயன்படுத்தப்பட்டுவந்தது. அபின் வன்மையுள்ள மருந்தாக விளங்கினாலும் உடல் வேதனையை நீக்க, ரணமருவத்திற் கேற்ற நல்ல மருந்தாக அதைக் கொள்ளமுடியவில்லை. நோயாளிகளை உணர்வற்ற நிலைக்கு கொண்டுவர அதிகமான அளவு கொடுக்க நேரிடும்பொழுது, மூச்சுஓட்டம் குறைந்து அனேகமாக நோயாளிகள் வாந்தி எடுக்கும் நிலைக்கு வந்தனர். சுருங்கக் கூறின், அபின் ரணமருத்துவ மயக்க மருந்தாக வேலை செய்ததைவிட நஞ்சாக அதிகம் வேலைசெய்தது என்னலாம்.

• ஆனால் அபினால் மருத்துவப்பயன் இல்லாமல் இல்லை. அதிலிருந்து இன்று தயாரிக்கப் படும் மார்பின் (Morphine), கோடீயின் (Codeine) போன்ற தூக்க மருந்துகள், ரணமருத்துவ 'பின்வேதனை' (After-pain)க்கும், புற்றுநோய்வலிக்கும், உளயியல் அதிர்ச்சிக்கும் பயன்படுகின்றன.

மார்பின் அபினிலிருந்து பிரித்து எடுக்கப் பட்ட முதல் மருந்தாகும்; பிரடெரிக் வில் ஹெல்ம் செர்டர்னர் என்ற ஜெர்மானியரால் கண்டுபிடிக்கப்பட்டது. மார்பினுக்கும் அபி னுக்குள்ள எல்லா குணங்களும் உண்டு. மார் பின் தூய்மையாக்கப் பட்ட அபினாகும். தூக் கத்தின் மூலம் பின்வேதனையை நீக்க அதிக மான அளவு வாயின் வழியாக உட்செலுத்தப் படும்பொழுது வாந்தி ஏற்பட்டுவிடும். அபி னைப் போலவே மார்பின் அளவுக்குமேல் நஞ் சாகும். இன்று மார்பின், ஊசிகளின் மூலம் உடலுக்குள் செலுத்தப்பட்டு வாந்தி எடுப் பது தவிர்க்கபபடுகிறது.

சாராயச் சத்துள்ள பொருள்களும் வரலாற் றுக் காலத்திற்கு முன்தொட்டுப் பயன்படுத் தப்பட்டிருக்கின்றன. பழரசங்களைப் புளிக் கச் செய்து அதிலிருந்த சாராயச்சத்து (Alcohol) அடங்கிய குடிவகைகள் தயாரிக்கப் பட்டன; இன்றும் எல்லா நாடுகளிலும் தயா ரிக்கப்படுகின்றன. இம்மது வகைகள் உணர் வை அகற்றி உடல்வேதனையை மறக்கும் படிச் செய்வதில்லை; புதிய புதிய எண்ணங் களையும் செயல்களையும், உண்டாக்கி, மனவேத னையை மறக்கச் செய்கின்றது. குடி உடல் நலத்திற்கு உகந்ததா அல்லவா என்பது பற்றி இருவித முகாம்களிலிருந்தும் வாதங் கள் பிறக்கின்றன. இரண்டு கருத்துகளிலும் உண்மை இருக்கத்தான் செய்கின்றன. அள வுமீறி விலக்கயியலாப் பழக்கமாக குடியைக் கொண்டால் அதனால் உடல்நலக்கேடு பிறக் கும். இன்று மருந்துகள் பலவற்றில் சாராயச் சத்து சேர்க்கப்பட்டு உட்கொள்ளப்படுகிற தாகையால் குடிவகைகள் மனிதனுக்கு நன்மை யையும் கொடுக்கின்றது, தீமையையும் அளிக்க வல்லவை. மனிதன் பயன்படுத்தும் விதத் தில்தான் நன்மை தீமை அமைகின்றன.

சாராயச் சத்துள்ள குடிவகைகள் வேதனை யை மறக்கும் அளவிற்கு உணர்வற்ற நிலையை உண்டாக்கவில்லை. ஆனால் சாராயச் சத்தின் சேர்க்கை கொண்டு தயாரிக்கப்படும் குளோர பாரம், ஈதர் போன்றவைகள் இன்று ரண மருத்துவத்திற்கேற்ற மயக்க மருந்துகளாக பயன்படுகின்றன.

போதை தருகிற பொருள்களைத் தவிர ரண மருத்துவ வேதனையை நீக்க வேறுமுறை களும் கையாளப்பட்டன. மந்திரங்களின் மூலம் நோய்களையும் வேதனையையும் அகற்ற முடியும் என்று பழங்கால மக்கள் மிகவாக நம்பியிருந்தனர். மதக்குருமார்கள் தங்களை மந்திர மருத்துவர்களெனக்கூறி, தாங்கள் உப யோகித்த மந்திர சக்தியை நேராக ஆண்ட வனிடமிருந்து பெற்றதாக மக்களை நம்பவைத் தனர். ஆனால் அறிவியல் காலம் மலர்ந்த தும் அந்த மந்திரங்களுக்கு சக்தியில்லாமல் போய்விட்டன.

மந்திர மருத்துவத்தைப்போன்று 18-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் மெஸ்மெரிசம் என்ற மருத்துவம் பிரான்ஸ் ஆன்டன் மெஸ்மர் என் பவரால் கையாளப்பட்டு மிக குறுகியகாலத் தில் மக்களிடையே ஒரு கவர்ச்சியை உண்டாக் கிற்று. அற்புதங்களில் ஆழ்ந்தநம்பிக்கை யுடைய பெரும்பாலான மக்கள் மெஸ்மெரிச வித்தையக்கண்டு வியந்தனர். மெஸ்மெரிசத் தின் மூலம் வேதனையை நீக்கமுடியும் என்று மெஸ்மர் கூறினர். ஆனால் நடைமுறையில் பலனளிக்கவில்லை; மெஸ்மெரிசம் மூடமந்திர மாகவே இருந்தது.

ஜேம்ஸ் பிரெய்ட் என்பவர் மெஸ்மெரிச முறையை ஆராய்ந்து அதை மாற்றி இப்னா டிசம் என்ற ஒரு புதுமுறையை வகுத்தார். இப்னாடிச உறக்கத்தை உண்டுபண்ணுவதன் மூலம் ரணமருத்துவம் செய்யலாமென்று|கூறி னர். ஆனால் இந்த முறையும் பயனளிக்க வில்லை. இப்னாடிசம் நோயாளிகளின் உளவியல் தன்மைகளைப் பொருத்துச் செய்யக்கூடிய மருத்துவமாகும். உளவியல் தன்மைகள் எல்லா நோயாளிகளிடத்தும் ஒரே விதமாக அமைந்திருப்பதில்லை. சிலர் எளிதில் விரை வில் இப்னாடிசத்திற்குக் கட்டுப்பட்டு உறங்கி விடுவர். சிலரிடம் பலநாட்கள், மாதக்கணக்கில் கூட இப்னாடிச உறக்கத்தை ஏற்படுத்த முடி யாது.

மேலும் இப்னாடிச மருத்துவர் எந்த நோயா ளியையும் குணப்படுத்திவிடமுடியும் என்று துணிந்து கூறமுடியாது. இக்காரணங்களால் மருத்துவத்துறையில் இப்னாடிசம் சிறந்த முறையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஒரு மருந்து, உபயோகப்படுத்தப்படும்பொழுது, ஒரு சில முரண்பட்ட நோயாளிகளைத் தவிர மற்ற யாவரிடத்தும், ஒத்த தன்மையான விளைவுகளை உண்டாக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் மருத்துவர்கள் மருந்து களைத் தயாரித்து நோய்களைப் போக்கி வந்த னர். இப்னாடிச முறை இதற்கு முற்றிலும் மாறாக இருந்தது. இப்னாடிச முறையால் ஒரு சில சிறிய ரணசிகிச்சைகளை சில மருத்துவர் கள் செய்துகாட்டினர் என்றாலும் பலவகை யான ரணசிகிச்சைகளுக்கும், எல்லா நோயாளி களுக்கும், எந்த இடத்திலும் எந்தச் சமயத்தி லும் பயன்படககூடிய முறையாக அது சிறக்க வில்லை. இப்னாடிசம் உடல் வேதனையைத் தீர்க்

கும் துறையிலிருந்து நீங்கி, உள வேதனையை ஆராயும் உளநோய்த் (Psychiatry) துறையோடு சேர்ந்து, தற்காலத்தில் உளக் கூறுபாடு (Psycho-Analysis) முறையிலும் கலந்திருக்கிறது.

ரோமானியர்கள் ரணமருத்துவ வேதனையை நீக்க கழுத்தின் ரத்தக்குழாய்களை அழுத்திப் பிடிக்கும் ஒரு முறையைக் கையாண்டனர். இதனால் மூளைக்குச்செல்லும் ரத்தவோட்டம் தடைப்பட்டு உணர்வற்ற நிலை உண்டாக வழி ஏற்பட்டது. இந்தப் பயங்கரமான முறை அவ்வப்போது கைவிடப்பட்டும், கைக்கொள்ளப்பட்டும் வந்தது. 18-ஆம் நூற்றுண்டில் பரே, மூர், ஜான் ஹண்டர் முதலிய மருத்துவர்கள் இம்முறையைப் பின்பற்றினர். ஆனல் அதில் காணப்பட்ட ஆபத்தையுணர்ந்து அதைக் கைவிடவேண்டியவரானர்கள்.

குளிர்ச்சியின்மூலம் உணர்வற்ற நிலையை உண்டாக்கலாம் என்பதை நெப்போலியனின் படையுடன் சென்ற மருத்துவர் கண்டார். நெப்போலியன் ரஷ்யாவின்மீது படையெடுத்துச் சென்றபொழுது—குளிர் கடுமையாக இருந்தது. போரிலே கைகால்களை இழந்த வீரர்கள் வேதனையை பொருட்படுத்தாமல் இருந்தனர். இதைக்கண்ட அந்த மருத்துவர் கடுமையான குளிரை ரணமருத்துவம் செய்யுமிடத்தில் பாய்ச்சி அதன்மூலம் வேதனையை மறக்கச்செய்யலாம் என்று குறிப்பு எழுதி வைத்தார். மரத்துப்போகும் தன்மையை குளிர் உண்டாக்கும் என்பதை ஒரு பனிக்கட்டியை கையில் வைத்துப் பார்ப்பதன்மூலம் தெரிந்துகொள்ளலாம். ரணமருத்துவம் செய்வதற்கான கடுமையான குளிரை மருத்துவ காலம் முடியும்வரை உடம்பின் ஒரு பாகத்தில் ஏற்படச்செய்வதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டு அம்முறை இயலாததாகிவிட்டது.

18-ம் நூற்றுண்டின் முற்பகுதிவரை இப்படிப் பலப்பல முறைகள் கொள்ளப்பட்டும் கைவிடப்பட்டும் இருந்திருக்கின்றன.

ரண மருத்துவமுறை பண்டைக் காலத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டதென்றுலும் மற்ற துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிபோல் ரணமருத்துவ துறையில் ஏற்படவில்லை. சென்ற நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஒரு பல்லைப் பிடுங்குவது என்றுல் அது மிகப் பெரிய ரண மருத்துவமாகக் கருதப்பட்டது. ரண மருத்துவத்தின்போது ஏற்படும் வேதனையை நோயாளியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த வேதனையைத் தீர்க்கவும் எந்த மருந்துகளாலும் முடியவில்லை. இந்த நிலையில் மருத்துவர்களால் பெரும் ரணமருத்துவங்களைச் செய்ய முடியவில்லை. நூற்றுண்டுக் கணக்காக தேடித் தேடியும் மருந்துகள் கிடைக்காததால் மருத்துவர்கள் ரணமருத்துவ வேதனையைக் குறைக்க, மருத்துவ காலத்தைக் குறைப்பதில் தங்கள் திறமையைக் காட்டினர். நெப்போலியன் காலத்தில் அனேவரியின் என்ற படையில் பணியாற்றிய தலைமை மருத்துவர் ஒருவர், பொடிப்போடும் நேரத்திற்குள் கையைத் துண்டிக்கும் ஆற்றல் பெற்றிருந்தாராம். வில்லியம் செசில்டென் (*1688—1752*) என்ற ஆங்கிலநாட்டு மருத்துவர் வயிற்றை அறுத்து வலிக்குக் காரணமான 'கல்'லை ஒரு நிமிட நேரத்தில் எடுத்துவிடுவாராம்.

நம் தமிழ்நாட்டில் பண்டைக் காலத்தில் ரண மருத்துவம் கையாளப்பட்டிருக்கிறது. ரண மருத்துவ வேதனையைக் குறைக்க அவர்களும் ரணமருத்துவத்தில் விரைவிற்கு அதிக கவனம் செலுத்தியிருக்கின்றனர். நம் நாட்டில் பன்னெடுங்காலத்திற்கு முன்னரே மருத்துவக் கலை சிறந்தோங்கியிருக்கின்றது. இந்நாட்டில் ஏற்பட்ட மத ஆதிக்கத்தால் வளர்ச்சியுருமல் அழிவுற்ற பல கலைகளில் மருத்துவக்கலையும் ஒன்ருகும். சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே தெறித்துக் கிடக்கும் சில குறிப்புகளின் மூலம் பண்டைத்தமிழர்கள் மருத்துவ கலையில் சிறந்திருந்தனர் என்பது தெரியவருகிறது. பின்வரும் பாடல் அத்தகைய குறிப்புகளில் ஒன்ருகும்.

" மீன்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்
சிரல் பெயர்ந்தென்ன நெடுவள்ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின் "

இது பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தின் இரண்டாம் பாடலில் உள்ளது. இதைப் பாடிய பெரும்புலவர் பரணராவார். கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் புகழ்ந்து பாடுங்காலை அவனது வீரர்களைப் பற்றிக் குறிப்பிடுகிருர்.

மீன்றேர் கொட்பிற்-மீனைப் பிடிக்கும் சூழ்ச்சியால்; பனிக்கயம் மூழ்கி சிரல் பெயர்ந்தென்ன - குளிர்ந்த குளத்துள் பாய்ந்து மூழ்கி மேலே எழுகின்ற சிரல் பறவையின் அலகையொக்கும்; நெடுவள்ளூசி - புண்களைத் தைக்குங் காலத்து குருதியிலே மூழ்கி மறைந்தெழுகின்ற நெடிய வெண்மையான ஊசியினால் உண்டாய; வடுவாழ் பரந்த மார்பின் - வடு பொருந்திய பரந்த மார்பினையும் (கொண்டு விளங்குகின்ற வீரர்கள்.)

மீன் கொத்திப் பறவை தனது அலகைக் கீழ் காட்டிக்கொண்டு நீருக்குள் பாய்ந்து மூழ்கி மறைந்து பின் அலகை மேனோக்கி நிறுத்தி வெளியேறுவது, வீரர் மார்பின் கிழிந்த புண்ணைத் தைக்கும்போது சென்று திரும்பும் ஊசிக்கு உவமையாக்கப்பட்டிருக்கிறது. இங்கே உவமை, வடிவம், விரைவு இரண்டையும் விளக்குகின்றது. குளத்துள் பாயும்பொழுது கீழ்நோக்கிச் செல்லும் பறவையின் அலகு எழும்போது மேல் நோக்கித் திரும்புவதைப் போன்று புண்களைத் தைக்கும் போது ஊசியின் முனை திரும்புகிறது என்பதையும் வேகமாகப் பாயும் மீன்கொத்திப் பறவையைப் போன்று மருத்துவர் கையிலுள்ள ஊசி செல்லும் என்பதையும் பரணர் அழகுற விளக்கிக் காட்டுகிறார். இதனால் பண்டைத் தமிழ் மருத்துவர்கள் ரண மருத்துவத்தில் விரைவிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து நோயாளியின் வேதனையைக் குறைக்க முற்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

அந்தக் காலத்திலிருந்து சென்ற நூற்றாண்டின் முற்பகுதிவரை ரண மருத்துவத்திற்குட்பட்ட நோயாளிகளின் வேதனையை விரைவான மருத்துவங்கள் மூலம்தான் சிறிதளவு குறைக்க முடிந்தது.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் ரண மருத்துவ முறையில் மாபெரும் புரட்சி ஏற்பட்டது. ரண மருத்துவத்திற்கேற்ற மயக்க மருந்துகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கண்டு பிடிக்கப்பட்டு உடல் வேதனை சிறிதுமின்றி ரண மருத்துவம் செய்து கொள்ளலாம் என்பதையும், எளிதாகவும் விரைவாகவும் நோய்களை போக்கிக்கொள்ளலாம் என்பதையும் மனிதன் கண்டான்.

மயக்க மருந்துகள் மற்ற கண்டுபிடிப்புகளைப் போன்று திடீரென்று ஒரு நாளில் தோன்றிவிடவில்லை. அல்லது ஒருவரின் ஓயாத உழைப்பினால் மட்டும் உண்டானதல்ல. வேதனையைத் தீர்க்கவந்த மயக்க மருந்தும் மிகுந்த வேதனைக்குப் பின்னர்தான் பிறந்தது.

ரண மருத்துவ மயக்க மருந்துகள் கண்டு பிடிப்பதற்கு பலர் பல வகைகளில் காரணமாக இருந்தார்கள். ரண மருத்துவத்திற்கேற்ற மயக்க மருந்தைப்பற்றிய முதற்குறிப்பை எழுதிவைத்தவர் அம்பிரி டேவி என்ற ஆங்கில நாட்டு இயைபியல் வல்லுநர் (Chemist) ஆகும்.

'சான்றுகளி'ன் தன்மையைப் பற்றி ஆராய்ந்த ஜோசப் பிரீஸ்ட்லி என்ற அறிஞர் 1771-ம் ஆண்டில் நைட்ரஸ் ஆக்சைட் என்ற ஒரு வாயுவைக் கண்டுபிடித்தார். பிரீஸ்ட்லியும், லவாஸ்சியர் என்பவரும் உயிர் வாயு, கரியமில வாயு இவைகளை முகர்ந்து உட்கொள்வதன் மூலம் ஏற்படும் தன்மைகளை ஆராய்ந்தனர். ஆனால் நைட்ரஸ் ஆக்சைட் வாயுவைப் பற்றி அதிகமாக ஆராயவில்லை. அமெரிக்காவில் சாமுவெல் லாதம் மிச்சில் என்பவர் நைட்ரஸ் ஆக்சைடை ஆராய்ந்து அது தொத்து நோயைப் பரப்பக் கூடியதென்றும் சிறிதளவு உட்கொண்டாலும், உடம்பில் பட்டாலும் பயங்கரமான விளைவுகளை யுண்டாக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அம்பிரி டேவி நைட்ரஸ் ஆக்சைடை ஆராய முற்பட்டு 1798-ல் மிச்சலின் கூற்று தவறானது என்பதை விளக்கினார். நைட்ரஸ் ஆக்சைட் வாயுவை புண்களில் காட்டியும் மிருகங்களின் மேல் படச் செய்தும் பல ஆராய்ச்சிகள் செய்து தானும் கொஞ்சம் முகர்ந்து பார்த்தார். மிச்சில் எச்சரித்தபடி எதுவும் நிகழவில்லை.

இதன் பிறகு டேவி நைட்ரஸ் ஆக்சைட் வாயுவை முகர்ந்து முகர்ந்து ஆராய்ச்சிகள் நடத்தினர். அதை முகர்வதால் ஒருவித உணர்வற்ற நிலையுண்டாவதையும் விதவிதமான விசித்திர எண்ணங்கள் தோன்றுவதையும் கண்டார். சிறிதுநாள் ஆராய்ச்சிக்குப் பின் நைட்ரஸ் ஆக்சைட் வாயுவை முகர்ந்திருக்கும்போது உடல் வேதனை குறைகிறது என்பதையும் கண்டார். அந்த வாயு ஒருவித போதையை யுண்டாக்கி விசித்திர எண்ணங்களையும் உண்டாக்கியதால் அதற்கு சிரிக்கும் வாயு (Laughing Gas) என்ற பெயர் கொடுத்தார்.

எல்லாவற்றையும் விட வாயுவைப்பற்றி அவர் எழுதிவைத்த ஒரு குறிப்பு மிக முக்கியமானதாக அமைந்தது. "நைட்ரஸ் ஆக்சைட் வாயு, அதிகமான அளவில் உட்கொள்ளப்பட்டிருக்கும் பொழுது, உடல் வேதனையை நீக்குவதால் அதிக இரத்தம் வெளியேறிடாத ரண மருத்துவங்களில் பயனளிக்க உதவும்" என்று தனது முடிவைக் குறித்தார்.

டேவி, நைட்ரஸ் ஆக்சைட் இரத்த ஓட்டத்தை அதிகமாக்கும் என்று நம்பியதால் 'அதிக இரத்தம் வெளியேறிடாத ரண மருத்துவங்களில்' என்று குறிப்பிட்டார்.

"உடன் ஒவ்வொரு மருத்துவ மனைகளிலும் நைட்ரஸ் ஆக்சைட் என்ற சிரிக்கும் வாயு

பயன்படுத்தப்பட்டு டேவியின் உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டது" என்றுதான் எவரும் முடிவுகொள்ள முனைவர், ஆனால் உண்மை அதுவன்று. டேவி வெளியிட்ட கருத்துக்களை எந்த மருத்துவ விடுதியும் சிந்திக்கவில்லை. டேவியும் அதைக் குறிப்பிட்டதோடு இருந்தாரே யொழிய நடைமுறையில் ஆராயவில்லை. டேவியின் கருத்துக்கள் மருத்துவமனைக்குள் புகுந்து பயனளிப்பதற்குச் சுமார் ஐம்பதாண்டுகள் ஆகியது.

அட்டைப்படம்

ரண மருத்துவ மயக்க மருந்திற்கான குறிப்புகளை வெளியிட்ட அம்பிரி டேவி இங்கிலாந்தில் பென்சால்ஸ் என்ற இடத்தில் 1778-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் நாள் பிறந்தார். 1795-ல் டேவி மருத்துவர் பயிற்சியைப்பெற போர்லேஸ் என்ற மருத்துவரிடம் சேர்ந்தார்.

அப்பொழுது காற்றுகளின் தன்மையைப் பற்றி பல ஆராய்ச்சிகள் நடைபெற்று, ஜோசப் பிரிஸ்ட்லி, லவாய்சியர் போன்ற அறிஞர்கள் பல புதிய வாயுக்களைக் கண்டுபிடித்து அதனதன் தன்மையைக் குறித்திருந்தார்கள்.

1798ல் பெட்டோஸ் என்ற மருத்துவர் டேவியின் இயைபியல் (Chemistry) அறிவைக் கண்டு மருத்துவராவதைவிட டேவி இயைபியல் ஆராய்ச்சியாளராக மாறவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதோடு பலரிடமிருந்தும் உதவியைப்பெற்று பிரிஸ்டல் நகரில் ஒரு ஆராய்ச்சிக்கூடத்தைத் துவக்கினர். அதற்குத் தலைவராக டேவி நியமிக்கப்பட்டார்.

இங்கே நடைபெற்ற ஆராய்ச்சிகள் டேவியை ஒரு அறிவியல் வல்லுநன் என்பதை வெளியுலகுக்குக் காட்டியது. இயைபியல் துறையில் டேவி கண்ட உண்மைகளை அறிந்த லண்டன் அரசினர் நிலயத்தார் (Royal Institution) டேவியை அழைத்து அங்கே அவருக்கு இயைபியல் பேராசிரியர் பதவியைக் கொடுத்தனர். 1801ம் ஆண்டில் டேவி இப்பதவியை ஏற்றார்.

டேவியின் பெரும் புகழுக்குக் காரணமாக அமைவது அவர் கண்டுபிடித்த சுரங்கப் பாதுகாப்பு விளக்காகும். 1815-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15-ம் நாள் டேவிக்கு கிரே என்ற மருத்துவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. வெடிவிபத்துகளைத் தவிர்த்து நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களைக் காப்பாற்றும்வகையில் ஒரு பாதுகாப்பு விளக்கு ஒன்று கண்டுபிடிக்குமாறு அவர் டேவியைக் கேட்டுக்கொண்டிருந்தார். டேவியின் சுரங்க விளக்குபற்றி அரசினர் கழகம் (Royal Society) நவம்பர் திங்கள் 9-ம் நாளன்று அறிவித்தது. டிசம்பர் திங்களில் விளக்குகள் வெளிவந்தன. இந்த நேரத்தில் டேவி ஒரு பெரிய செல்வந்தராகவேண்டுமென்று எண்ணியிருந்தால் அது எளிதில் கைகூடியிருக்கும். டேவி தான் கண்டுபிடித்த விளக்கிற்கு உற்பத்தியாக்கும் தனியுரிமையைப் பெற்றிருந்தால் அதன்மூலம் அவர் பெருஞ்செல்வம் திரட்டியிருக்கலாம். டேவியின் சுயநலமற்ற, மனிதாபிமானத் தொண்டிற்கு இதுவே உதாரணமாக விளங்குகின்றது. அரசினர் கழகம் 1818ல் டேவியின் கண்டுபிடிப்பிற்காக அவருக்கு ரம்போர்டு பதக்கத்தை (Rumford Medal) அளித்தனர். 1820ல் அரசினர் கழகத்தின் தலைவராக டேவி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1823ல் டேவியின் உடல்நலம் குன்ற ஆரம்பித்தது. 1825-ல் தாயின் பிரிவால் வருந்திய டேவி 1827 ஜனவரியில் இங்கிலாந்தைவிட்டு ராவென்னுவிற்குச் சென்று அக்டோபரில் திரும்பினர். ஆனால் நெடுநாட்களுக்கு அவர் இங்கிலாந்தில் தங்கியிருக்க முடியவில்லை. 1828-ம் ஆண்டு மார்ச் 29-ம் நாள் டேவி தன் மனைவியுடன் இங்கிலாந்தைவிட்டு மறுபடியும் புறப்பட்டார். புறப்படுமுன் அப்பொழுதுதான் செய்து முடித்திருந்த எரிமலைபற்றிய தனது ஆராய்ச்சிக் குறிப்புகளை அரசினர் கழகத்திற்கு அனுப்பினர். அதே ஆண்டு நவம்பர் திங்கள் அரசினர் கழகத்திற்கு டேவி அனுப்பிய, சூறுவளிபற்றிய ஆராய்ச்சியின் குறிப்புகள் அடங்கிய கடிதமே கடைசிக் கடிதமாகும்.

டேவி 1829-ம் ஆண்டு மேத்திங்கள் 28-ம் நாள் தன் மனைவியுடன் ஜெனிவா நகர் வந்து சேர்ந்தார். மறுநாள் காலையில், நண்பர்களில் ஒருவரான டாக்டர் யங் என்பவர் இறந்துவிட்ட செய்தியை தனது மனைவி கூறிய சிறிது நேரத்திற்கெல்லாம் டேவி தனது வாழ்வையும் முடித்துக்கொண்டார்.

திருத்தம்

34-ம் பக்கத்தில் 2-ம் கலத்தில் முதல் வரியில் 'சான்றுகளின்' என்று இருப்பதற்குப் பதிலாக 'காற்றுகளின்' என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

— ஆசிரியர்.

திராவிடத்தின் வரலாற்றிலே ஓர் திருப்பு முனை!

திராவிடம் வளம்பெற—திராவிடர் நலம்பெற—திட்டங்கள் வகுக்க,

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு!

மே 17, 18, 19, 20-இல்

திருச்சியில்

நடைபெறும்

அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம்பற்றி விளக்கந்தரும்

கவர்ச்சிமிக்க கண்காட்சிகள்!

எழுச்சிதரும் இன்னிசை அரங்குகள்!

உணர்ச்சி ஊட்டும் நாடக நிகழ்ச்சிகள்!

புரட்சி பயக்கும் திட்டங்கள்!

சிறப்புமிக்க சொற்பொழிவுகள்!

ஆகிய எல்லாம் சிந்தனைக்கு அரிய விருந்தூட்டும்!

அனைவரும் திரண்டு வாரீர்!

—வரவேற்புக்குழு.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)